# அரச நிதி

## பொதுவான போக்குகள்

வலுவான இறையினை நோக்கிய தற்போதைய கொள்கைச் சீராக்கங்கள் நாட்டின் தேர்தல்களின் காரணமாக 1994 இல் பின்னடைந்தமையானது நாட்டின் பேரண்டப் பொருளாதாரத்தின் உறுதிப்பாட்டினை மிகக் கடுமையாகப் பாதித்துள்ளது. வரிவிதிப்பில் செய்யப்பட்ட பல்வேறுபட்ட பொருத்தமான மாற்றங்கள், மற்றும் அரச செலவினக் கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டமை என்பனவற்றின் தாக்கங்களினால் அரசிறை / மொ. உ. உற்பத்தி விகிதம் 1993 இன் 19.7 சதவீதத்திலிருந்து 1994 இல் 19.0 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்த வேளையில் நடைமுறைச் செலவினம் / மொ. உ. உற்பத்தி விகிதம் 20.5 சதவீதத்திலிருந்து 22.0 சதவீதத்திற்கு அதிகரித்தது. இந் நடவடிக்கைகள் நடைமுறைக் கணக்குப் பற்றாக்குறையை 1993 இல் மொ. உ. உற்பத்தியின் 0.8 சதவீதத்திலிருந்து 1994 இல் மொ. உ. உற்பத்தியின் 2.9 சதவீதத்திற்கு உயர்த்தியதுடன் அரசின் இறைத் தொழிற்பாடுகளில் காணப்பட்ட பெரும் நுகர்வு சார்ந்த தன்மையையும் பிரதிபலித்தன. மேலும், மொ. உ. உற்பத்தியுடன் தொடர்பான அரசின் முதலீடுகள் 1993 இன் 8 சதவீதத்திலிருந்து 1994 இல் 7 சதவீதத்திற்குக் குறைவடைந்தபோதும் வரவு செலவுத் திட்டத்தின் உயர்ந்த மட்ட நடைமுறைச் செலவு காரணமாக மொத்தச் செலவினம் / மொ.உ உற்பத்தி விகிதம் 1993 இல் மொ. உ. உற்பத்தியின் 28.1 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 1994 இல் மொ. உ. உற்பத்தியின் 29.0 சதவீதமான உயர்ந்த அளவில் விளங்கியது. மொத்த அரசிறை செலவினப் பாய்ச்சல்கள் 1993 இன் 8.4 சதவீதத்திற்கெதிராக 1994 இல் மொ. உ. உற்பத்தியில் 10 சதவீதமான வரவு செலவுத் திட்டப் பற்றாக்குறையைத் தோற்றுவித்தன. 1994 இல் மொத்தப் பற்றாக்குறை 1989 – 1993 காலப்பகுதிக்கான சராசரிப் பற்றாக்குறையான 9.7 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் சிறிதளவே உயர்வாக இருந்தது. குறிப்பாக, தனியார் துறையிலிருந்து கொடுகடனுக்காக எழும் உயர்ந்த வலுவான கேள்வி, தாராளமயமாக்கப்பட்ட பொருளாதார சூழ்நிலையில் காணப்படும் பெருமளவு மூலதன உட்பாய்ச்சல் என்பனவற்றின் பின்னணியில் தொடர்ச்சியான உயர்ந்த வரவுசெலவுத் திட்டப் பற்றாக்குறை அண்மைய ஆண்டுகளின் பேரண்டப் பொருளாதார முகாமைத்துவத்தில் மிகப்பெரும் கவனத்திற்குரிய விடயமாக உள்ளது.

## இறைச் செயலாற்றம்

1994 இல் அரசின் அரசிறை ரூ. 1,100,380 இலட்சமாக விளங்கி 1993 இன் 15 சதவீத வளர்ச்சிக்கெதிராக 12 சதவீத வளர்ச்சியைப் பதிவு செய்தது. அரச அரசிறையின் வளர்ச்சி மொ. உ. உற்பத்தியின் பெயரளவிலான வளர்ச்சியை விட மிகக் குறைவாகக் காணப்பட்டு அரசிறை/மொ. உ. உற்பத்தி விகிதத்தினை 1993 இன் 19.7 சதவீதத்திலிருந்து 1994 இல் 19.0 சதவீதத்திற்குக் குறைவடையச் செய்தது. இது 1989 – 1993 காலப்பகுதியில் அடையப்பட்ட ஆண்டுச் சராசரி அரசிறை/மொ. உ. உற்பத்தி விகிதமான 20.6 சதவீதத்தினைவிட மிகக் குறைவாக இருந்தது. அண்மைய ஆண்டுகளில் அரசிறை/மொ.உ. உற்பத்தி விகிதத்தில் ஏற்பட்ட

## அட்டவணை 1.58

## அரசின் இறைத்தொழிற்பாடுகளின் தொகுப்பு

ரூபா பத்து இலட்சம்

| விடயம் | | 1990 | 1991 | 1992 | 1993 | 1994 ஒப்புதலளிக் கப்பட்ட மதிப்பீடுகள் | 1994 தற்காலிகம் | 1995 ஒப்புதலளிக் கப்பட்ட மதிப்பீடுகள் |
|---|---|---|---|---|---|---|---|---|
| மொத்த அரசிறையும் கொடைகளும் | .. | 74,662 | 84,049 | 94,061 | 106,364 | 123,220 | 118,295 | 146,040 |
| மொத்த அரசிறை | .. | 67,964 | 76,179 | 85,781 | 98,339 | 115,634 | 110,038 | 137,110 |
| வரி அரசிறை | .. | 61,206 | 68,157 | 76,353 | 85,891 | 105,276 | 99,417 | 121,324 |
| வரியில்லா அரசிறை | .. | 6,758 | 8,022 | 9,428 | 12,448 | 10,358 | 10,621 | 15,786 |
| கொடைகள் | .. | 6,697 | 7,870 | 8,280 | 8,025 | 7,586 | 8,257 | 8,930 |
| செலவினமும் மீள்கொடுப்பனவைக் கழித்த கடன் வழங்கலும் | .. | 99,814 | 119,527 | 116,973 | 140,460 | 154,219 | 167,768 | 186,595 |
| நடைமுறை | .. | 71,771 | 83,756 | 89,639 | 102,288 | 109,367 | 127,084 | 133,424 |
| மூலதன | .. | 19,529 | 25,304 | 24,948 | 33,662 | 35,233 | 30,391 | 42,668 |
| மீள்கொடுப்பனவைக் கழித்த கடன் வழங்கல் | .. | 8,514 | 10,467 | 2,386 | 4,510 | 9,619 | 10,293 | 10,503 |
| நடைமுறைக் கணக்குமிகை/குறை ( – ) | .. | -3,807 | -7,577 | -3,858 | -3,949 | -6,267 | -17,046 | 3,680 |
| வரவுசெலவுத் திட்டக்குறை (கொடைகளுக்கு முன்) | .. | -31,850 | -43,348 | -31,192 | -42,121 | -38,585 | -57,730 | -49,485 |
| வரவுசெலவுத் திட்டக்குறை (கொடைகளுக்குப் பின்) | .. | -25,153 | -35,478 | -22,912 | -34,096 | -30,999 | -49,473 | -40,555 |
| நிதியிடல் | .. | 25,152 | 35,478 | 22,913 | 34,096 | 30,999 | 49,474 | 40,555 |
| வெளிநாட்டுக் கடன்பாடு | ... | 11,644 | 19,329 | 7,361 | 9,855 | 18,241 | 11,778 | 18,38[illegible] |
| உள்நாட்டுக் கடன்பாடு | ... | 13,508 | 16,149 | 15,552 | 24,241 | 12,758 | 37,696 | 22,173 |
| சந்தையல்லாக் கடன்பாடு | ... | 305 | 691 | -3,205 | 2,012 | — | -666 | — |
| சந்தைக் கடன்பாடு | ... | 13,203 | 15,458 | 18,757 | 22,229 | 12,758 | 38,362 | 22,173 |
| வங்கியல்லா | ... | 12,946 | 15,423 | 21,079 | 28,308 | 12,758 | 37,205 | 29,578 |
| வங்கி | ... | 257 | 35 | -2,322 | -6,079 | — | 1,157 | -7,405 |

(தொடரும்)

அட்டவணை 1.58 (தொடர்ச்சி)

## அரசின் இறைத்தொழிற்பாடுகளின் தொகுப்பு
### மொ.உ.உ. இன் சதவீதமாக

| விடயம் | 1990 | 1991 | 1992 | 1993 | 1994 | | 1995 |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | ஒப்புதலளிக்கப்பட்ட மதிப்பீடுகள் | தற்காலிகம் | ஒப்புதலளிக்கப்பட்ட மதிப்பீடுகள் |
| மொத்த அரசிறையும் கொடைகளும் .. | 23.2 | 22.6 | 22.1 | 21.4 | 21.7 | 20.4 | 22.2 |
| மொத்த அரசிறை .. | 21.1 | 20.4 | 20.2 | 19.7 | 20.3 | 19.0 | 20.8 |
| வரி அரசிறை .. | 19.0 | 18.3 | 17.9 | 17.2 | 18.5 | 17.2 | 18.4 |
| வரியில்லா அரசிறை .. | 2.1 | 2.2 | 2.2 | 2.5 | 1.8 | 1.8 | 2.4 |
| கொடைகள் .. | 2.1 | 2.1 | 1.9 | 1.6 | 1.3 | 1.4 | 1.4 |
| செலவினமும் மீள்கொடுப்பனவைக் கழித்த கடன் வழங்கலும் .. | 31.0 | 32.1 | 27.5 | 28.1 | 27.1 | 29.0 | 28.3 |
| நடைமுறை .. | 22.3 | 22.5 | 21.1 | 20.5 | 19.2 | 22.0 | 20.2 |
| மூலதன .. | 6.1 | 6.8 | 5.9 | 6.7 | 6.2 | 5.3 | 6.5 |
| மீள்கொடுப்பனவைக் கழித்த கடன் வழங்கல் .. | 2.6 | 2.8 | 0.6 | 0.9 | 1.7 | 1.8 | 1.6 |
| நடைமுறைக் கணக்குமிகை/குறை (–) .. | -1.2 | -2.0 | -0.9 | -0.8 | 1.1 | -2.9 | 0.6 |
| வரவுசெலவுத் திட்டக்குறை (கொடைகளுக்கு முன்) .. | -9.9 | -11.6 | -7.3 | -8.4 | -6.8 | -10.0 | -7.5 |
| வரவுசெலவுத் திட்டக்குறை (கொடைகளுக்குப் பின்) .. | -7.8 | -9.5 | -5.4 | -6.8 | -5.4 | -8.5 | -6.1 |
| நிதியிடல் ... | 7.8 | 9.5 | 5.4 | 6.8 | 5.4 | 8.5 | 6.1 |
| வெளிநாட்டுக் கடன்பாடு ... | 3.6 | 5.2 | 1.7 | 2.0 | 3.2 | 2.0 | 2.8 |
| உள்நாட்டுக் கடன்பாடு ... | 4.2 | 4.3 | 3.7 | 4.9 | 2.2 | 6.5 | 3.4 |
| சந்தையல்லாக் கடன்பாடு ... | 0.1 | 0.2 | -0.8 | 0.4 | – | -0.1 | - |
| சந்தைக் கடன்பாடு ... | 4.1 | 4.1 | 4.4 | 4.4 | 2.2 | 6.6 | 3.4 |
| வங்கியல்லா ... | 4.0 | 4.1 | 5.0 | 5.7 | 2.2 | 6.4 | 4.5 |
| வங்கி ... | 0.1 | ... | -0.5 | -1.2 | – | 0.2 | -1.1 |


மூலம் : இலங்கை மத்திய வங்கி

கிரமமான வீழ்ச்சி அரசின் அரசிறையினது வழமையான நெகிழ்ச்சித் தன்மையினை வலியுறுத்துவது மட்டுமன்றி ஆண்டில் அவ்வப்பொழுது குறிப்பாக, தேசிய தேர்தல்களின்போது வேறுபட்ட விதிவிலக்குகள் மற்றும் மனம்போன படியிலான வழிமுறைகள் வழங்கப்பட்டமையின் காரணமாக நாட்டின் வரித் தளத்தில் ஏற்பட்ட தொடர்ச்சியான தேய்வின் பாதகமான தாக்கத்தையும் பிரதிபலித்தது. இதன்காரணமாக பாதுகாப்புத் தீர்வை மற்றும் ஆண்டின் தொடக்கத்தில் தெரிந்தெடுக்கப்பட்ட பண்டங்களின் மீது விதிக்கப்பட்ட கலால்வரி என்பனவற்றினூடாக மேலதிக அரசிறையைப் பெற முயற்சி எடுக்கப்பட்டபோதும் 1994 இல் பொதுவான அரசிறை முயற்சி தொடர்ந்தும் மோசமடைந்தது. இது அரசின் இறைத் தொழிற்பாடுகளில் குறிப்பாக நடைமுறைச் செலவினத்தில் காணப்படும் உயர்ந்த அழுத்தத்தின் பின்னணியில் மிகக் கவலைக்குரியதொரு விடயமாக உள்ளது.

அதேவேளை உள்நாட்டுப் படுகடனின் உயர்ந்த செலவுகளின் தாக்கத்தின் கீழ் அரச சம்பளங்கள் மற்றும் ஓய்வூதியங்களின் மீதான உயர்ந்த செலவினம், பல்வேறுபட்ட நலன்புரி நிகழ்ச்சித் திட்டங்களின் பேரிலான மிக உயர்ந்த குடியிருப்பாளர் மாற்றல்கள் என்பனவற்றின் காரணமாக நடைமுறைச் செலவினம் 1993 இன் ரூ. 1,022,880 இலட்சத்திலிருந்து 1994 இல் ரூ. 1,270,840 இலட்சத்திற்கு உயர்வடைந்தது. இது 24 சதவீதம் கொண்டதொரு அதிகரிப்பாகும். இதன்விளைவாக மொ. உ. உற்பத்தியின் விகிதமாக நடைமுறைச் செலவினம் 1993 இன் 20.5 சதவீதத்திலிருந்து 1994 இல் 22.0 சதவீதத்திற்கு உயர்வடைந்து 1989 – 1993 காலப்பகுதியில் அடையப்பட்ட ஆண்டுச்சராசரி நடைமுறைச் செலவினம் மொ. உ. உற்பத்தி விகிதமான 22.8 சதவீத அளவினைப் பெரும்பாலும் ஒத்ததாக அமைந்துள்ளது.

நலிவடைந்த அரசிறைத் தன்மை மற்றும் உயர்ந்த நடைமுறைச் செலவினம் என்பனவற்றின் பின்னணியில், வரவு செலவுத் திட்டத்தின் நடைமுறைக் கணக்கு ரூ. 170,460 இலட்சம் கொண்ட முன்னெப்பொழுதுமில்லாத உயர்ந்த பற்றாக்குறையினை உருவாக்கியது. இது நடைமுறைக் கணக்குத் தொழிற்பாடுகளில் குறைவடைந்து செல்கின்ற பற்றாக்குறையை நோக்கிய அண்மைய போக்குகளுக்கு பெருமளவிற்கு மாறானதாகும். இதனால் 1992 இன் மொ. உ. உற்பத்தியில் 0.9 சதவீதத்திலிருந்து 1993 இன் மொ. உ. உற்பத்தியில் 0.8 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்த நடைமுறைக் கணக்குப் பற்றாக்குறை 1994 இல் மொ. உ. உற்பத்தியில் 2.9 சதவீதத்திற்கு அதிகரித்து நாட்டின் உள்நாட்டுச் சேமிப்பு முயற்சிகளை குறைத்தது. அதேவேளை அரச முதலீடு (அரசின் வரவு செலவுத் திட்டத்தின் மூலம் நிதியிடப்படும் மூலதனச் செலவும் அரசின் வர்த்தக தொழில் முயற்சிகளுக்கான கடன் வழங்கலும்) ரூ. 404,550 இலட்சங்களாக அமைந்து பெயரளவு நியதிகளில் சிறிதளவு அதிகரித்தபோதும் மொ. உ. உற்பத்தியுடன் தொடர்புபடுத்தி பார்க்கையில் 1993 இல் மொ. உ. உற்பத்தியின் 8 சதவீதத்திலிருந்து 1994 இல் மொ.உ. உற்பத்தியில் 7 சதவீதத்திற்கு பெருமளவில் வீழ்ச்சியடைந்தது. அரச முதலீட்டில் சிறிதளவு அதிகரிப்பு மாத்திரமே காணப்பட்டபோதும் வரவு செலவுத் திட்டத்தின் மொத்த செலவினம் 1993 இன் ரூ. 1,404,600 இலட்சத்திலிருந்து (மொ. உ. உற்பத்தியில் 28.1 சதவீதம்) 1994 இல் ரூ. 1,677,680 இலட்சத்திற்கு (மொ. உ. உற்பத்தியில் 29.0 சதவீதம்) உயர்வடைந்தமைக்கு நடைமுறைச் செலவினத்தில் ஏற்பட்ட மிகக் கூடியளவு உயர்வே காரணமாகும்.

## இறை அளவுகளின் போக்குகள்




இலங்கை மத்திய வங்கி

அரசிறை மற்றும் செலவின அமைப்பில் வழமையாகவுள்ள நலிவுபெற்ற தன்மையையும் அதேபோன்று காலத்திற்குக் காலம் அரசிறை செலவின வழிமுறைகளூடாக தற்காலிகமாக வழங்கப்பட்ட எழுந்தமானமான நிவாரணங்களையும் உசிதமான வழிமுறைகளை நாடுகின்றமையையும் உறுதிப்படுத்துகின்ற விதத்தில் 1994 இன் இறைத் தொழிற்பாடுகள் 1993 இன் ரூ. 431,210 இலட்சம் கொண்ட பற்றாக்குறையுடன் ஒப்பிடுகையில் ரூ. 577,300 இலட்சம் (கொடைகளுக்கு முன்) கொண்ட மொத்தப் பற்றாக்குறையை உருவாக்கின. இதன்விளைவாக வரவு செலவுத் திட்டப் பற்றாக்குறை மொ. உ. உற்பத்தி விகிதம் 8.4 சதவீதத்திலிருந்து 10.0 சதவீதத்திற்கு அதிகரித்தது. ரூ. 82,570 இலட்சம் கொண்ட வெளிநாட்டுக் கொடைகளின் பயன்பாடு காரணமாக (மொ. உ. உற்பத்தியின் 1.4 சதவீதம்) வெளிநாட்டு உள்நாட்டுக் கடன்பாடுகளின் மூலமாக நிதியிடப்பட்ட பற்றாக்குறை (கொடைகளின் பின்னர்) 1993 இன் ரூ. 340,960 இலட்சம் கொண்ட பற்றாக்குறையுடன் (மொ. உ. உற்பத்தியில் 6.9 சதவீதம்) ஒப்பிடுகையில் 1994 இல் ரூ. 494,740 இலட்சமாக (மொ. உ. உற்பத்தியில் 8.5 சதவீதம்) விளங்கியது. ரூ. 117,780 இலட்சம் (மொ. உ. உற்பத்தியில் 2.0 சதவீதம்) கொண்ட சலுகை அடிப்படையிலான வெளிநாட்டுக் கடன்கள் செயற்றிட்டக் கடன்களின் பேரிலான ரூ. 47,970 இலட்சத்துடன் இணைந்து அரச முதலீட்டு செயற்றிட்டங்களில் ஏறத்தாழ 41 சதவீதத்தினை நிதியிடுவதற்கு உதவியபோதும் உள்நாட்டுக் கடன்பாடுகள் மூலதன செயற்றிட்டங்களின் உள்நாட்டு மூலவள தேவைப்பாடுகளை பெருமளவில் விஞ்சும் விதத்தில் அதிகரித்து 1993 இன் ரூ. 242,410 இலட்சத்துடன் (மொ. உ. உற்பத்தியில் 4.9 சதவீதம்) ஒப்பிடுகையில் 1994 இல் ரூ. 376,960 இலட்சத்தினை (மொ. உ. உற்பத்தியில் 6.5 சதவீதம்) அடைந்தமைக்கு 1994 இல் பதிவுசெய்யப்பட்ட உயர்ந்த நடைமுறைக் கணக்குப் பற்றாக்குறையே காரணமாகும். வரவு செலவுத் திட்டத்தின் நடைமுறைக் கணக்குத் தொழிற்பாடுகளில் காணப்பட்ட பாதகமான அபிவிருத்தி வங்கித் தொழில் முறையிலிருந்தான ரூ. 11,570 இல்ட்சம் கொண்ட கடன்பாடுகளுக்குப் புறம்பாக வங்கியல்லா மூலங்களிலிருந்தான ரூ. 365,390 இலட்சம் கொண்ட கடன்பாடுகளுக்கும் வழியமைத்து அத்தகைய கடன்பாடுகள் வேறு விதத்தில் தனியார்துறைக்குக் கிடைத்திருக்கக்கூடிய மூலவளங்களை அவர்களுக்கு முன்னமேயே பயன்படுத்திக் கொள்வதற்கான நிலையை ஏற்படுத்துகின்றமை மட்டுமன்றி பேரண்டப் பொருளாதார முகாமைத்துவத்தையும் நலிவடையச் செய்கிறது. இதனால் வரவு செலவுத் திட்டத் தொழிற்பாடுகள் வங்கியல்லா மூலங்களில் முழுமையாகத் தங்கியிருந்த முன்னைய ஐந்து ஆண்டுகளைப் போலன்றி, 1994 இன் வரவு செலவுத் திட்டத் தொழிற்பாடுகள் வங்கித் தொழில் முறையிலிருந்தான நிதிப் பயன்பாட்டினை நாடியமையானது நாணயக் கூட்டுக்களில் ஏற்கனவே காணப்பட்ட உயர்ந்த விரிவாக்கத்தின் மீது நேரடியான அழுத்தத்தினை உண்டுபண்ணியது. அரசு அதன் கடன்பாட்டுத் தேவைகளைக் குறைக்கக் கூடியதாக இருக்கும் அதேவேளையில் உயர்ந்த மட்ட அரச முதலீடுகளையும் பேண வேண்டுமாயின் இது அரசின் இறைத் தொழிற்பாடுகளில் நடைமுறைக் கணக்குப் பற்றாக்குறையினை ஒழிப்பதனை நோக்கிய ஒருங்கிணைந்த முயற்சி தேவை என்பதனை வலியுறுத்துகிறது. 1990 – 1994 காலப்பகுதிக்குரிய அரசின் இறைத் தொழிற்பாடுகளின் தொகுப்பினை அட்டவணை 1.58 தருகின்றது.

## அரசிறை

1994 இல் அரசின் அரசிறை ரூ. 1,100,380 இலட்சமாக அமைந்து முன்னைய ஆண்டின் 15 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 12 சதவீதம் கொண்ட அதிகரிப்பினைப் பதிவு செய்தது. மொத்த அரசிறையில் வரி அரசிறையின் பங்கு 1993 இன் 87 சதவீதத்திலிருந்து 1994 இல் 90 சதவீதத்திற்கு அதிகரித்தவேளையில் வரி அரசிறை அமைப்பிற்குள் பொருட்கள் மற்றும் பணிகள் மீதான வரிகளின் முக்கியத்துவமும் அதன் பங்கு 1993 இன் 56 சதவீதத்திலிருந்து 1994 இல் 57 சதவீதத்திற்கு அதிகரித்தமையுடன் மேலும் உயர்வடைந்தது. பாதுகாப்புத் தீர்வை, மற்றும் கலால் வரிகளிலிருந்தான அதிகரித்த வரிச் சேகரிப்புக்களே இவ்வபிவிருத்திக்கு காரணமாகும். இறக்குமதித் தீர்வைச் சேகரிப்பில் 9 சதவீதம் கொண்ட பெயரளவு வளர்ச்சி காணப்பட்டபோதும் மொத்த வரி அரசிறையில் அத்தகைய சேகரிப்புக்களின் பங்கு 1992 இல் 27 சதவீதத்திலிருந்து 1993 இல் 24 சதவீதத்திற்கும் 1994 இல் மேலும் 23 சதவீதத்திற்கும் வீழ்ச்சியடைந்தமைக்கு பரந்தளவு பண்டங்கள் மீது தீர்வை தளர்த்தல்களும் விலக்குகளும் வழங்கப்பட்டமையின் விளைவாக இறக்குமதித் தீர்வைக்கான வரித்தளம் தேய்வடைந்தமையே காரணமாகும். அதேவேளை ஆகக்குறைந்த வருமான வரி வீதம் 40 சதவீதத்திலிருந்து 1994 ஏப்பிறலில் 35 சதவீதத்திற்கு குறைக்கப்பட்டபோதும் வருமான வரிகளில் ஏற்பட்ட 22 சதவீதம் கொண்ட செழிப்பான அரசிறை வளர்ச்சியின் செல்வாக்கின் காரணமாக மொத்த அரசிறையில் இதன் பங்கு 1993 இன் 13 சதவீதத்திலிருந்து 1994 இல் 14 சதவீதத்திற்கு அதிகரித்தது.

வரியல்லா அரசிறை ரூ. 106,210 இலட்சமாக அமைந்து முன்னைய ஆண்டினைவிட 15 சதவீதமான வீழ்ச்சியைக் காட்டியது. வரியல்லா அரசிறையில் வட்டி வருவாய் ஏறத்தாழ 43 சதவீதத்திற்கு வகைகூறிய வேளையில் மத்திய வங்கியிலிருந்தான இலாப மாற்றல்கள் மற்றும் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம், சிறிலங்கா ரெலிகொம் என்பனவற்றின் மீதான நிதிச்சட்டத்தின் கீழ் விதிக்கப்பட்ட தீர்வைகள் உட்பட இலாபங்கள், பங்கிலாபங்கள், கட்டணம், விதிப்புக் கட்டணங்கள் என்பன 1994 இல் வரியல்லா அரசிறையில் மேலும் 37 சதவீதத்தினைப் பெற்றுக்கொடுத்தன.

## வரி அரசிறை

வரி அமைப்பில் உள்நாட்டுப் பொருட்கள், மற்றும் பணிகள் மீதான வரிகளின் அதிகரித்த முக்கியத்துவத்தினைப் பிரதிபலிக்கின்ற விதத்தில் உள்நாட்டுப் பொருட்கள் மற்றும் பணிகள் மீது விதிக்கப்பட்ட வரிகள் 1993 இன் ரூ. 479,630 இலட்சத்துடன் (மொ. உ. உற்பத்தியில் 9.6 சதவீதம்) ஒப்பிடுகையில் 1994 இல் ரூ. 566,850 இலட்சம் (மொ. உ. உற்பத்தியில் 9.8 சதவீதம்) கொண்ட தொகையை உருவாக்கின. வரிவிதிப்பில் இம் மூலங்களின் அதிகரித்த முக்கியத்துவத்திற்குப் பாதுகாப்புத் தீர்வை மற்றும் பணிகள் மீதான மொத்த விற்பனை வரிகள் என்பனவற்றிலிருந்தான செழிப்பான அரசிறையும், கலால்வரிக்கு உட்பட்ட விடயங்கள் விரிவாக்கப்பட்டமை மற்றும் சிகரட்டுக்கள் மீதான கலால்வரி அதிகரிக்கப்பட்டமை என்பனவே காரணமாகும்.

அட்டவணை 1.59

## கூறுகளின்படி அரசிறைத் தொகுப்பு

ரூபா பத்து இலட்சம்

| விடயம் | 1990 | 1991 | 1992 | 1993 | 1994 ஒப்புதலளிக் கப்பட்ட மதிப்பீடுகள் | 1994 தற்காலிகம் | 1995 ஒப்புதலளிக் கப்பட்ட மதிப்பீடுகள் |
|---|---|---|---|---|---|---|---|
| **வரி அரசிறை** ... | **61,206** | **68,157** | **76,353** | **85,891** | **105,276** | **99,417** | **121,324** |
| வருமானவரிகள் ... | 7,337 | 9,722 | 10,967 | 12,543 | 15,781 | 15,277 | 15,420 |
| தனியார் ... | 2,957 | 3,539 | 4,067 | 5,235 | 5,504 | 5,621 | 5,270 |
| கூட்டு* ... | 4,380 | 6,183 | 6,900 | 7,308 | 10,277 | 9,656 | 10,150 |
| சொத்துக்கள் மீதான வரிகள் ... | 3,140 | 3,541 | 3,597 | 3,493 | 4,191 | 4,386 | 4,667 |
| மத்திய வங்கி வசமுள்ள திறைசேரி உண்டியல்கள் மீதான வரி | 2,618 | 3,033 | 1,991 | 1,073 | 540 | 471 | - |
| உள்நாட்டு பொருட்கள் பணிகள் மீதான வரிகள் ... | 28,770 | 32,107 | 38,158 | 47,963 | 58,364 | 56,685 | 72,495 |
| பொது விற்பனை, மொத்த விற்பனை வரி ... | 20,291 | 21,430 | 24,095 | 29,663 | 35,401 | 32,300 | 39,005 |
| தயாரிப்பு ... | 6,798 | 7,945 | 8,262 | 9,231 | 11,518 | 9,171 | 11,380 |
| தயாரிப்பல்லாத ... | 3,726 | 2,974 | 3,546 | 4,825 | 4,134 | 6,445 | 8,180 |
| இறக்குமதிகள் ... | 9,767 | 10,511 | 12,287 | 15,607 | 19,749 | 16,684 | 19,445 |
| கலால் வரி ... | 8,170 | 10,597 | 10,232 | 11,655 | 13,929 | 14,632 | 20,339 |
| குடிவகை ... | 2,657 | 3,126 | 3,434 | 4,063 | 5,013 | 4,686 | 5,410 |
| புகையிலை ... | 5,461 | 6,884 | 5,573 | 6,866 | 7,148 | 7,888 | 10,232 |
| ஏனையவை ... | 52 | 587 | 1,225 | 726 | 1,768 | 2,058 | 4,697 |
| பாதுகாப்பு வரி ... | – | – | 3,764 | 6,589 | 8,759 | 9,683 | 10,887 |
| உரிமக் கட்டணங்கள் ... | 309 | 80 | 67 | 56 | 275 | 60 | 2,264 |
| பன்னாட்டு வர்த்தகத்தின் மீதான வரிகள் ... | 19,341 | 19,754 | 21,640 | 20,819 | 26,400 | 22,598 | 28,742 |
| இறக்குமதிகள் ... | 16,792 | 18,617 | 20,819 | 20,762 | 26,400 | 22,598 | 28,742 |
| ஏற்றுமதிகள் ... | 2,549 | 1,137 | 821 | 57 | – | – | – |
| தேயிலை ... | 1,601 | 492 | 360 | 23 | – | – | – |
| இதில் பெறுமான விகிதவரி ... | 1,311 | 298 | 226 | – | – | – | – |
| இறப்பர் ... | 747 | 476 | 318 | 16 | – | – | – |
| தெங்கு ... | 151 | 125 | 117 | 4 | – | – | – |
| ஏனைய ஏற்றுமதிகள் ... | 50 | 44 | 26 | 14 | – | – | – |
| **வரியல்லா அரசிறை** ... | **6,758** | **8,022** | **9,428** | **12,448** | **10,358** | **10,621** | **15,786** |
| சொத்து வருவாய் ... | 4,192 | 5,964 | 6,262 | 8,154 | 6,879 | 7,459 | 10,622 |
| இதில் மத்திய வங்கி இலாபங்கள் | 500 | 500 | 1,150 | 1,000 | 1,000 | 1,200 | 1,200 |
| வட்டி வருவாய் ... | 1,143 | 2,617 | 3,596 | 4,390 | 4,406 | 4,560 | 5,635 |
| வர்த்தக முயற்சிகளின் மிகை ... | 2,235 | 2,612 | 1,179 | – | – | – | – |
| கட்டணங்களும் விதிப்புக் கட்டணங்களும் ... | 835 | 917 | 1,225 | 1,303 | 1,490 | 1,430 | 2,409 |
| ஏனைய வரியில்லா அரசிறை ... | 1,731 | 1,141 | 1,941 | 2,991 | 1,989 | 1,732 | 2,755 |
| **மொத்த அரசிறை** ... | **67,964** | **76,179** | **85,781** | **98,339** | **115,634** | **110,038** | **137,100** |

(தொடரும்)

* வங்கிகளின் மறுசீரமைப்பு நோக்கங்களுக்காக வழங்கப்பட்ட முறிகளின் மீதான தடுத்துவைத்தல் வரிஉட்பட.

## அட்டவணை 1.59 (தொடர்ச்சி)

## கூறுகளின்படி அரசிறைத் தொகுப்பு (மொ.உ.உ. இன் சதவீதமாக)

| விடயம் | 1990 | 1991 | 1992 | 1993 | 1994 | | 1995 |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | ஒப்புதலளிக் கப்பட்ட மதிப்பீடுகள் | தற்காலிகம் | ஒப்புதலளிக் கப்பட்ட மதிப்பீடுகள் |
| **வரி அரசிறை** ... | **19.0** | **18.3** | **17.9** | **17.2** | **18.5** | **17.2** | **18.4** |
| வருமானவரிகள் ... | 2.3 | 2.6 | 2.6 | 2.5 | 2.8 | 2.6 | 2.3 |
| தனியார் ... | 0.9 | 0.9 | 1.0 | 1.0 | 1.0 | 1.0 | 0.8 |
| கூட்டு* ... | 1.4 | 1.7 | 1.6 | 1.5 | 1.8 | 1.7 | 1.5 |
| சொத்துக்கள் மீதான வரிகள் ... | 1.0 | 1.0 | 0.8 | 0.7 | 0.7 | 0.8 | 0.7 |
| மத்திய வங்கி வசமுள்ள திறைசேரி உண்டியல்கள் மீதான வரி | 0.8 | 0.8 | 0.5 | 0.2 | 0.1 | 0.1 | – |
| உள்நாட்டு பொருட்கள் பணிகள் மீதான வரிகள் ... | 8.9 | 8.6 | 9.0 | 9.6 | 10.3 | 9.8 | 11.0 |
| பொது விற்பனை, மொத்த விற்பனை வரி ... | 6.3 | 5.8 | 5.7 | 5.9 | 6.2 | 5.6 | 5.9 |
| தயாரிப்பு ... | 2.1 | 2.1 | 1.9 | 1.8 | 2.0 | 1.6 | 1.7 |
| தயாரிப்பல்லாத ... | 1.2 | 0.8 | 0.8 | 1.0 | 0.7 | 1.1 | 1.2 |
| இறக்குமதிகள் ... | 3.0 | 2.8 | 2.9 | 3.1 | 3.5 | 2.9 | 2.9 |
| கலால் வரி ... | 2.5 | 2.8 | 2.4 | 2.3 | 2.4 | 2.5 | 3.0 |
| குடிவகை ... | 0.8 | 0.8 | 0.8 | 0.8 | 0.9 | 0.8 | 0.8 |
| புகையிலை ... | 1.7 | 1.8 | 1.3 | 1.4 | 1.3 | 1.4 | 1.5 |
| ஏனையவை ... | ... | 0.2 | 0.3 | 0.1 | 0.3 | 0.4 | 0.7 |
| பாதுகாப்பு வரி ... | – | – | 0.9 | 1.3 | 1.5 | 1.7 | 1.6 |
| உரிமக் கட்டணங்கள் ... | 0.1 | ... | ... | ... | ... | – | 0.3 |
| பன்னாட்டு வர்த்தகத்தின் மீதான வரிகள் ... | 6.0 | 5.3 | 5.1 | 4.2 | 4.6 | 3.9 | 4.4 |
| இறக்குமதிகள் ... | 5.2 | 5.0 | 4.9 | 4.2 | 4.6 | 3.9 | 4.4 |
| ஏற்றுமதிகள் ... | 0.8 | 0.3 | 0.2 | ... | – | – | – |
| தேயிலை ... | 0.5 | 0.1 | 0.1 | ... | – | – | – |
| இதில் பெறுமான விகிதவரி ... | 0.4 | 0.1 | 0.1 | ... | – | – | – |
| இறப்பர் ... | 0.2 | 0.1 | 0.1 | ... | – | – | – |
| தெங்கு ... | ... | ... | ... | ... | – | – | – |
| ஏனைய ஏற்றுமதிகள் ... | ... | ... | ... | ... | – | – | – |
| **வரியல்லா அரசிறை** ... | **2.1** | **2.2** | **2.2** | **2.5** | **1.8** | **1.8** | **2.4** |
| சொத்து வருவாய் ... | 1.3 | 1.6 | 1.5 | 1.6 | 1.2 | 1.3 | 1.6 |
| இதில் மத்திய வங்கி இலாபங்கள் | 0.2 | 0.1 | 0.3 | 0.2 | 0.2 | 0.2 | 0.2 |
| வட்டி வருவாய் ... | 0.4 | 0.7 | 0.8 | 0.7 | 0.8 | 0.8 | 0.9 |
| வர்த்தக முயற்சிகளின் மிகை ... | 0.7 | 0.7 | 0.3 | – | – | – | – |
| கட்டணங்களும் விதிப்புக் கட்டணங்களும் ... | 0.3 | 0.2 | 0.3 | 0.3 | 0.3 | 0.2 | 0.4 |
| ஏனைய வரியில்லா அரசிறை ... | 0.5 | 0.3 | 0.5 | 0.6 | 0.3 | 0.3 | 0.4 |
| **மொத்த அரசிறை** ... | **21.1** | **20.4** | **20.2** | **19.7** | **20.3** | **19.0** | **20.8** |

* வங்கிகளின் மறுசீரமைப்பு நோக்கங்களுக்காக வழங்கப்பட்ட முறிகளின் மீதான தடுத்து வைத்தல் வரி உட்பட

மூலம் : இலங்கை மத்திய வங்கி

ஏற்றுமதிகள் தவிர்ந்த அனைத்துப் பொருட்கள் மற்றும் பணிகள் மீதும் விதிக்கப்பட்ட பாதுகாப்புத் தீர்வை ரூ. 96,930 இலட்சத்தினை உருவாக்கி 47 சதவீதம் கொண்ட கணிசமான வளர்ச்சியைப் பதிவு செய்தது. இவ்வரசிறை மூலத்தில் ஏற்பட்ட மிகக் கூடியளவு அதிகரிப்பிற்கு 1994 சனவரியிலிருந்து பாதுகாப்புத் தீர்வை 3 சதவீதத்திலிருந்து 3.5 சதவீதத்திற்கு அதிகரிக்கப்பட்டமை ஓரளவிற்கும் வரித்தளத்தில் ஏற்பட்ட வளர்ச்சி ஓரளவிற்கும் காரணமாகின. பாதுகாப்புத் தீர்வையானது நிருவாக வசதிகளுக்கு மேலதிகமாக பரந்த வரித்தளமொன்றின் மீது தனியான வரிவீதமொன்றினைப் பயன்படுத்துகின்ற மையினால், அத்தகைய வரி முறையானது அரசின் அரசிறை முயற்சியை உறுதிசெய்துகொள்ளுவதற்காக வேண்டி பல்வகை வீதங்கள் மற்றும் குறுகிய அடிப்படை ஆகிய பண்புகளைக் கொண்ட ஏனைய வரிகளைவிட மிகச் சிறந்த முறையாகும் என்பதும் நிரூபிக்கப்பட்டுள்ளது.

மொத்த விற்பனவு வரிகள் முன்னைய ஆண்டின் 23 சதவீத அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் ரூ. 323,000 இலட்சமாக விளங்கி 9 சதவீதத்தினால் அதிகரித்தன. மொத்த விற்பனவு வரியின் மெதுவான வளர்ச்சிக்கு தயாரிப்பு நடவடிக்கைகளின் மீதான மொத்த விற்பனவு வரிகள் 1 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தமையும் இறக்குமதிகள் மீதான மொத்த விற்பனவு வரியின் மெதுவான அதிகரிப்புமே காரணமாகும். தயாரிப்பு வெளியீட்டின் பெறுமதி அதிகரிப்பினதும் இறக்குமதிகளின் பெறுமதியின் கணிசமான அதிகரிப்பினதும் மத்தியிலும் கூட இத்தகைய கொடுக்கல் வாங்கல் நடவடிக்கைகளின் மீது மொத்த விற்பனவு வரியின் கீழான வருவாய்ச் செயலாற்றம் திருப்திகரமானதாகக் காணப்படவில்லை. 1994 இல் இந்த வரிகளிலிருந்து வழங்கப்பட்ட பலதரப்பட்ட வரிவிலக்குகளே இதற்கான காரணமாகும். எனினும் பணிகள் துறையில் குறிப்பாக வங்கித் தொழில் மற்றும் நிதியியல் பணிகளின் உறுதியான விரிவாக்கத்துடன் இசைந்து செல்லும் வகையில் துறைமுகம், மின்வலு தொலைத்தொடர்பு என்பனவற்றின் மீதான மொத்த விற்பனவு வரிகள் ரூ. 64,450 இலட்சத்தினை உருவாக்கியதோடு முன்னைய ஆண்டின் 36 சதவீத அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் 34 சதவீத அதிகரிப்பைக் குறித்துக்காட்டின.

1994 இல் ரூ. 146,320 இலட்சமாக விளங்கிய கலால் தீர்வைகளிலிருந்தான வருவாய் முன்னைய ஆண்டின் 14 சதவீத அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் 26 சதவீத அதிகரிப்பைப் பதிவு செய்தது. வெறியக் குடிவகை மீதான கலால் வரிகள் ரூ. 46,860 இலட்சமாக விளங்கி வெறியக் குடிவகைகளின் விற்பனை அதிகரிப்பின் காரணமாக 15.3 சதவீத அதிகரிப்கைக் காட்டிய வேளையில் பதனிடப்பட்ட புகையிலை மற்றும் சிகரட் என்பனவற்றின் மீதான வரிகள் ரூ. 78,880 இலட்சமாக அமைந்து 14.9 சதவீத அதிகரிப்பைக் காட்டின. சிகரட்டு மீதான கலால்வரி ஒவ்வொரு 1,000 சிகரட்டுக்களுக்கும் விதிக்கப்பட்டிருந்த ரூ. 525 இலிருந்து 1994 மாச்சில் ஒவ்வொரு 1,000 சிகரட்டுகளுக்கும் ரூ. 700 இற்கு அதிகரிக்கப்பட்டமையே இதற்கான பெருமளவு காரணமாக அமைந்தது. துணிகழுவும் பொறிகள், குளிரூட்டிகள், மின்விசிறிகள், உபகரணங்கள் என்பனவற்றின் உற்பத்தித் தீர்வை வீதங்களின் அதிகரிப்பினையும் உற்பத்திவரி (சிறப்பு ஏற்பாடுகள்) சட்டத்தின்கீழ் ஏனைய பல நீண்டகாலப் பாவனைப் பொருட்கள் உள்ளடக்கப்பட்டதையும் 1993 ஒற்றோபரில் அறிமுகப்படுத்தப்பட்ட பெற்றோல் தீர்வையின் முழு ஆண்டுத் தாக்கத்தினையும் தொடர்ந்து 1993 இன் ரூ. 7,260 இலட்சத்துடன் ஒப்பிடுகையில்

1994 இல் ரூ. 20,580 இலட்சம் கொண்ட மேலதிக தொகையொன்று திரட்டப்பட்டது. அரசின் அரசிறையில் கலால் வரிகளின் அதிகரித்த முக்கியத்துவமானது குறிப்பாக முதலாந்தரப் பண்டங்களின் ஏற்றுமதியானது உயர்ந்த ஏற்றுமதி வரிகளுக்கும் சுங்கத் தீர்வைகளுக்கும் உட்படுத்தப்பட்டிருந்து 1990 இற்கு முன்னர் வருவாயின் உறுதியான மூலமாக விளங்கிய பன்னாட்டு வர்த்தகம் தொடர்பான வரிகளிலிருந்து உள்நாட்டு வரிகளுக்கு மாறுகின்றமையை கோடிட்டுக் காட்டியது.

1994 இல் மொத்த இறக்குமதிகளின் பெறுமதி 22 சதவீதத்தினால் அதிகரித்த போதிலும் சுங்கத் தீர்வைகளின் ஊடான வருவாய்ச் சேகரிப்பு ரூ. 225,980 இலட்சத்திற்கு 8.5 சதவீதத்தினால் மட்டுமே அதிகரித்தது. இதன் விளைவாக மொத்த இறக்குமதிகளில் இறக்குமதித் தீர்வைச் சேகரிப்புக்களின் விகிதமாகிய சராசரி இறக்குமதித் தீர்வை வீதம் 1993 இன் 10. 8 சதவீதத்திலிருந்து 1994 இல் 9.6 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது. 1991 இல் 14.7 சதவீதமாக விளங்கிய இறக்குமதித் தீர்வைவீதம் 1992 இல் 13.6 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது. இறக்குமதித் தீர்வையின் சராசரி நிகழ்வுகளின் வீழ்ச்சியானது அண்மைய ஆண்டுகளில் சுங்கத் தீர்வைகளின் கிரமமான குறைப்புக்களுடன் ஒத்திருந்தபோதிலும் கூட சுங்கத் தீர்வைகளின் கடுமையான வீழ்ச்சியானது இவ்வாண்டில் பலதரப்பட்ட பண்டங்களுக்கான வரிவிலக்கல்களினதும் ஏற்றுமதிக் கைத்தொழில்களுக்கும் முதலீட்டுச் சபை தொழில் முயற்சிகளுக்கும் வழங்கப்பட்ட பலதரப்பட்ட வரிச்சலுகைகளினதும் பெருமளவு காரணமாக அமைந்தன. எனவே, இறக்குமதிகளின் பெறுமதி 1993 இன் ரூ. 1,935,500 இலட்சத்திலிருந்து 1994 இல் ரூ. 2,360,300 இலட்சத்திற்கு அதிகரித்தபோதிலும் தீர்வை விதிக்கப்படக்கூடிய இறக்குமதிகளின் பெறுமதி 1993 இன் ரூ. 864,550 இலட்சத்திலிருந்து 1994 இல் ரூ. 988,710 இலட்சத்திற்கு சிறிதளவால் மட்டுமே அதிகரித்தது.

சுங்கத் தீர்வையின் சராசரி நிகழ்வின் குறைப்புக்கு இறக்குமதிகளின் அமைப்பு மாற்றமும் பங்களிப்புச்செய்த ஒரு காரணியாக அமைந்தது. குறைவான இறக்குமதித் தீர்வையினைக் கொண்ட முதலீட்டுப் பொருட்கள் 33 சதவீதத்தினால் அதிகரித்து 1993 இன் 26 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 1994 இல் மொத்த இறக்குமதிகளில் 29 சதவீதத்திற்கு வகை கூறியது. மேலதிகமாக ரூ. 1,199,700 இலட்சம் பெறுமதியினைக் கொண்ட மொத்த இடைநிலைப் பொருட்களில் கிட்டத்தட்ட 50 சதவீதமானவை சுங்கத் தீர்வைக்கு உட்படுத்தப்படாத புடவைகள், வளமாக்கி,கோதுமைத் தானியம் ஆகியவையாகும். உந்து ஊர்திகள், வெறியக் குடிவகை மற்றும் புகையிலை தவிர்ந்த ஏனையவற்றிற்கு 1993 நவெம்பரில் 10, 20, 35, 45 ஆகிய நான்கு படிமுறை வீத அமைப்புக்களில் சுங்கத் தீர்வைகள் நியாயப்படுத்தப்பட்ட போதிலும்கூட வரித்தள்ளுபடிகளும் வரி விலக்களிப்புக்களும் வழங்கப்பட்டமையும் 1994 நடுப்பகுதியில் 5 சதவீத புதிய வரிப்படிமுறையொன்று உருவாக்கப்பட்டமையும் வரித்தளத்தில் கணிசமான தேய்வுக்கு இட்டுச்சென்றதுடன் சுங்கத் தீர்வைகளின் வர்த்தகக் கொள்கைக் குறிக்கோள்கள் மற்றும் வருவாய்க் குறிக்கோள்கள் ஆகிய இரண்டினையும் மோசமடையச் செய்தன. தெரிந்தெடுக்கப்பட்ட பொருட்களுக்கான புதிய 5 சதவீத படிமுறையின் உருவாக்கமும் கூட அத்தகைய பொருட்களின் இறக்குமதிகளை மொத்த விற்பனைவரிகளிலிருந்தும் விலக்களிப்பதாக இருந்தது.

உச்சவருமானவரிவீதம் 1993 இன் 50 சதவீத வரிவீதத்திலிருந்து 1994 இல் 35 சதவீத வரிவீதத்திற்கு படிப்படியாக குறைக்கப்பட்டபோதிலும் அண்மைய ஆண்டுகளில் செழிப்புமிக்க வருவாய் மூலமாக மாறியுள்ள வருமானவரிகள் ரூ. 152,770 இலட்சம் கொண்ட வருவாயுடன் தொடர்ந்தும் செழிப்பு மூலமாக விளங்கியதுடன் 1993 இன் 14 சதவீத அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் 22 சதவீத அதிகரிப்பையும் கொண்டிருந்தது. 1994 மேயில் உழைக்கும்போதே செலுத்தும் வரியின் விலக்களிப்புக்களின் அதிகரிப்பின் மத்தியிலும் ரூ. 56,210 இலட்சமாக விளங்கிய தனியாள் வருமானவரி வருவாய் 7 சதவீத அதிகரிப்பைக் காட்டியது. தனியார்துறை ஊழியர்களின் ஊதியங்களின் அதிகரிப்பும் பெறப்பட்ட வட்டி வருவாய்களின் அதிகரிப்புமே இதற்கான காரணமாக அமைந்தது. ஆட்களது வட்டி வருவாயின் மீதான வருமானவரியானது பெரும்பாலும் வங்கி வைப்புக்களின் தடுத்துவைக்கப்பட்ட வரிகளின் ஊடாகச் சேகரிக்கப்படுகின்றது. இதேவேளையில் கூட்டுவரி வீதம் 1993 இன் 40 சதவீதத்திலிருந்து 1994 இல் 35 சதவீதத்திற்கு குறைக்கப்பட்ட போதிலும் கூட்டுவருமானவரி ரூ. 96,560 இலட்சமாக விளங்கி கூட்டுவரி வருவாய்கள் 32 சதவீத அதிகரிப்பைக் காட்டின. இதற்கு 1994 இல் பதிவு செய்யப்பட்ட உயர்ந்த கூட்டுத்துறை இலாபங்களும், பெருமளவு வரிக் கோவைகளை கணனிமயப்படுத்தியதின் மூலம் வரி நிருவாகம் முன்னேற்றம் கண்டமையுமே பெருமளவு காரணமாக அமைந்தன.

1994 இல் ரூ. 43,860 இலட்சமாக விளங்கிய முத்திரைத் தீர்வைகள் 26 சதவீத அதிகரிப்பைப் பதிவு செய்தன. இறக்குமதிகளின் மீதான நாணயக் கடிதங்களின்மீது விதிக்கப்பட்ட முத்திரைத் தீர்வைகளே இதற்கான பெருமளவு காரணமாகும். மத்திய வங்கியின் பட்டியலில் திறைசேரி உண்டியல்களின் குறைந்த இருப்புக்களின் விளைவாக மத்திய வங்கியின் திறைசேரி உண்டியல் உடைமைகளின் மீது விதிக்கப்பட்ட வரி 1993 இன் ரூ. 10,730 இலட்சத்துடன் ஒப்பிடுகையில் ரூ. 4,710 இலட்சத்திற்கு வீழ்ச்சியடைந்தது. அரசின் அரசிறையின் புள்ளிவிபரத் தொகுப்பு அட்டவணை 1.59 இல் தரப்பட்டுள்ளது.

## வெளிநாட்டுக் கொடைகள்

1994 இல் வரவு செலவுத் திட்ட நோக்கங்களுக்காகப் பயன்படுத்தப்பட்ட மொத்த வெளிநாட்டுக் கொடைகள் ரூ. 82,570 இலட்சமாக விளங்கி முன்னைய ஆண்டின் 3 சதவீத வீழ்ச்சிக்கு மாறாக 3 சதவீத அதிகரிப்பைக் கொண்டிருந்தன. எனினும் மொத்த உள்நாட்டு உற்பத்தி தொடர்பாக மொத்த வெளிநாட்டுக் கொடைகள் 1993 இன் 1.6 சதவீதத்திலிருந்து 1994 இல் 1.4 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது. பொது முதலீட்டுச் செயற்றிட்டங்களுக்கு நிதி வழங்கிய செயற்றிட்டக் கொடைகளிலிருந்து கிடைத்த பெறுகைகள் ரூ. 47,970 இலட்சமாக விளங்கின.

## செலவு

ரூ. 1,677,680 இலட்சமாக விளங்கிய அரசின் மொத்த செலவினம் முன்னைய ஆண்டின் 20 சதவீத அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் 19 சதவீதம் கொண்டதொரு அதிகரிப்பைக் காட்டியது. ரூ. 1,270,840 இலட்சமாக விளங்கிய

நடைமுறைச் செலவினம் முன்னைய ஆண்டின் 73 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் மொத்தச் செலவில் 76 சதவீதத்திற்கு வகைகூறியது. இதேவளையில் அரச முதலீடு ரூ. 404,550 இலட்சமாக அமைந்து (பெரும்பாலும் உட்கட்டமைப்பு செயற்றிட்டங்களில் செறிவாகக் காணப்பட்டது) மொத்த உள்நாட்டு உற்பத்தி தொடர்பாக நோக்குகையில் 1993 இன் 8 சதவீதத்திலிருந்து 1994 இல் 7 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது.

**நடைமுறைச் செலவினம்**

ரூ. 1,270,840 இலட்சமாக விளங்கிய நடைமுறைச் செலவினம் முன்னைய ஆண்டின் 14 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 1994 இல் 24 சதவீதமான பாரிய அதிகரிப்பைப் பதிவு செய்தது. சம்பளங்கள், பயணம், வழங்கல்கள் மற்றும் தேவைப்பாடுகள் போன்றவற்றின் மீதான செலவு ரூ. 547,000 இலட்சமாக விளங்கி (இதில் பாதுகாப்புச் செலவு 50 சதவீதத்தைக் கொண்டிருந்தது) முன்னைய ஆண்டின் 13 சதவீத அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் 22 சதவீத அதிகரிப்பைப் பதிவு செய்தது. பாதுகாப்புச் செலவின் அதிகரித்த மட்டமும் பொது நிருவாகம் தொடர்பான அதிகரித்த செலவுமே இதற்கான காரணமாக அமைந்தது. உயர்ந்த கடன் பெறுகைகளை ஏற்படுத்திய தொடர்ச்சியான வரவு செலவுத் திட்டப் பற்றாக்குறையின் அதிகரித்த செலவினைப் பிரதிபலிக்கும் வகையில் அரச படுகடன் மீதான வட்டிக் கொடுப்பனவுகள் ரூ. 380,310 இலட்சமாக விளங்கின. இதில் 86 சதவீதம் உள்நாட்டுப் படுகடன் மீதானவையாகக் காணப்பட்டதுடன் 1994 இல் 26 சதவீத அதிகரிப்பையும் பதிவு செய்தன. ஓய்வூதியக் கொடுப்பனவுகளின் அதிகரித்த செலவினம் இவ்வாண்டின் பலதரப்பட்ட நலன்புரி நிகழ்ச்சித் திட்டங்களில் குறிப்பாக 1994 இன் மே தினத்தில் அறிவிக்கப்பட்ட நிவாரண வழிமுறைகளின் பின்னர் ஏற்பட்ட செலவினதும் தாக்கத்தின் கீழ் ஓய்வூதியம் மற்றும் நலன்புரி செலவு நிகழ்ச்சித் திட்டங்கள் என்பனவற்றை உள்ளடக்கிய வீட்டுத்துறைக்கான மொத்த மாற்றல் கொடுப்பனவுகள் ரூ. 282,630 இலட்சமாக விளங்கி 27 சதவீத அதிகரிப்பைப் பதிவு செய்தன.

அரசதுறைத் தொழில் வாய்ப்புக்களில் காணப்பட்ட தொடர்ச்சியான விரிவாக்கத்தின் சூழலில் அனைத்து அரச ஊழியர்களையும் உள்ளடக்கிய வகையில் அரசதுறை ஊழியர்களுக்கு 1993 இல் அறிவிக்கப்பட்டதும் 1993 இற்கும் 1994 இற்கும் இடையில் பல கட்டங்களில் நடைமுறைப்படுத்தப்பட்டதுமான 30 சதவீத கூலி அதிகரிப்பின் முழு ஆண்டுத் தாக்கத்தினதும் மே தின நிவாரண அறிவித்தலின் பின்னர் அமைய ஊழியர்களுக்கு நிரந்தர நிலைமை வழங்கப்பட்டமையினதும் காரணமாக ஆளணி ஊதியங்களுக்கான மொத்தச் செலவு ரூ. 293,090 இலட்சத்தினை எய்தியதோடு முன்னைய ஆண்டின் 27 சதவீத அதிகரிப்புக்கு மேலாக 11 சதவீத அதிகரிப்பைக் கொண்டிருந்தது. 1994 இல் இச் செலவானது மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 5 சதவீதத்தைக் கொண்டிருந்தது.

அரசின் அரசிறையினை மேலும் அதிகரிப்பதற்கான வாய்ப்புக்கள் மட்டுப்படுத்தப்பட்டுள்ள சூழ்நிலையில் தற்போதுள்ள அரசதுறைத் தொழில் வாய்ப்பின் மட்டத்தில் கணிசமான குறைப்பினை ஏற்படுத்துவதுடன் ஒத்துச்சென்றாலன்றி எதிர்காலத்தில் அரசதுறைத் தொழில் வாய்ப்பினை மேலும் விரிவுபடுத்துதல் மற்றும் அரச ஊழியர்களின் சம்பளங்களை அதிகரித்தல்

அட்டவணை 1.60

## செலவு, மீள் கொடுப்பனவுகள் கழித்த கடன் வழங்கல் என்பனவற்றின் பொருளாதாரப் பகுப்பாய்வு

ப.இ. ரூபாய்களில்

| விடயம் | 1990 | 1991 | 1992 | 1993 | 1994 ஒப்புதலளிக்கப்பட்ட மதிப்பீடுகள் | 1994 தற்காலிகம் | 1995 ஒப்புதலளிக்கப்பட்ட மதிப்பீடுகள் |
|---|---|---|---|---|---|---|---|
| **நடைமுறைச் செலவு ...** | **71,771** | **83,756** | **89,638** | **102,288** | **109,367** | **127,084** | **133,424** |
| பொருட்கள் பணிகள் மீதான செலவுகள் ... | 30,167 | 35,848 | 39,691 | 44,895 | 47,936 | 54,700 | 55,280 |
| சம்பளங்களும் கூலிகளும் ... | 15,748 | 17,985 | 20,793 | 26,332 | 27,851 | 29,309 | 32,898 |
| ஏனைய பொருட்களும் பணிகளும் ... | 14,419 | 17,863 | 18,898 | 18,563 | 20,085 | 25,391 | 22,382 |
| வட்டிக் கொடுப்பனவுகள் ... | 20,668 | 22,073 | 25,940 | 30,203 | 33,862 | 38,031 | 37,204 |
| வெளிநாட்டு ... | 3,678 | 4,113 | 4,739 | 5,102 | 5,904 | 5,511 | 6,361 |
| உள்நாட்டு ... | 16,990 | 17,960 | 21,201 | 25,101 | 27,958 | 32,520 | 30,843 |
| நடைமுறை மாற்றல்களும் உதவு தொகைகளும் ... | 20,936 | 25,835 | 24,007 | 27,190 | 27,570 | 34,353 | 40,940 |
| அரச கூட்டுத்தாபனங்களுக்கு ... | 2,639 | 1,743 | 1,428 | 1,571 | 2,196 | 2,634 | 7,757 |
| அரச நிறுவனங்களுக்கு | 1,811 | 1,405 | 1,649 | 2,031 | 2,360 | 1,976 | 2,360 |
| அரசின் ஏனைய மட்டங்களுக்கு ... | 1,237 | 1,050 | 1,111 | 896 | 1,060 | 1,307 | 1,250 |
| குடியிருப்புகளும் ஏனைய துறைகளும் ... | 15,249 | 21,637 | 19,819 | 22,335 | 21,954 | 28,263 | 29,305 |
| உணவு முத்திரை, உணவு உதவு தொகை போன்றன ... | 5,122 | 4,023 | 4,466 | 4,580 | 3,609 | 4,654 | 4,750 |
| சனசக்தி ... | 2,912 | 3,407 | 3,098 | 3,685 | 3,906 | 5,369 | 4,600 |
| ஓய்வூதியங்கள் ... | 4,490 | 8,832 | 8,099 | 10,516 | 10,877 | 13,271 | 14,394 |
| வளமாக்கி உதவு தொகை ... | – | – | – | – | – | 630 | 1,500 |
| ஏனைய ... | 2,725 | 5,375 | 4,156 | 3,554 | 3,562 | 4,339 | 4,061 |
| குறைச் செலவுக்கான ஒதுக்கு ... | – | – | – | – | – | – | – |
| **மூலதனச் செலவு ...** | **19,529** | **25,305** | **24,949** | **33,662** | **35,233** | **30,391** | **42,668** |
| உண்மைச் சொத்துக்களின் கையேற்பு ... | 12,025 | 14,072 | 12,604 | 19,719 | 20,595 | 16,747 | 24,894 |
| மூலதன மாற்றல்கள் ... | 7,504 | 11,233 | 12,345 | 13,943 | 14,638 | 13,644 | 17,774 |
| அரச கூட்டுத்தாபனங்களுக்கு ... | 1,249 | 2,993 | 4,610 | 4,311 | 4,139 | 4,246 | 5,230 |
| அரச நிறுவனங்களுக்கு ... | 5,303 | 6,990 | 6,663 | 8,551 | 9,673 | 8,433 | 11,383 |
| அரசின் ஏனைய மட்டங்களுக்கு ... | 843 | 950 | 1,028 | 1,036 | 708 | 914 | 1,112 |
| ஏனையவை ... | 109 | 300 | 44 | 45 | 118 | 51 | 49 |
| **மீள்கொடுப்பனவுகள் கழித்த கடன் வழங்கல்** | **8,514** | **10,467** | **2,386** | **4,510** | **9,619** | **10,293** | **10,503** |
| முற்பணக் கணக்குகள் ... | 1,699 | 1,819 | -150 | 410 | 250 | 2,462 | 500 |
| கடன் வழங்கல் ... | 7,219 | 7,286 | 6,246 | 6,265 | 12,013 | 10,064 | 13,761 |
| மீளமைப்புச் செலவு ... | – | 3,335 | 1,750 | 1,465 | 3,392 | 3,739 | 3,392 |
| தனியார்மயமாக்கலிற் பெற்றபேறு ... | – | -841 | -2,850 | -1,200 | -3,000 | -2,996 | -4,500 |
| கடன் மீள் கொடுப்பனவுகள் ... | -404 | -1,132 | -2,610 | -2,430 | -3,036 | -2,976 | -2,650 |
| **மொத்த செலவும் தேறிய கடன் வழங்கலும்** | **99,814** | **119,528** | **116,973** | **140,460** | **154,220** | **167,768** | **186,595** |

(தொடரும்)

அட்டவணை 1.60 (தொடர்ச்சி)

## செலவு, மீள் கொடுப்பனவுகள் கழித்த கடன் வழங்கல் என்பனவற்றின் பொருளாதாரப் பகுப்பாய்வு
(மொ.உ.உ. இன் சதவீதமாக)

| விடயம் | 1990 | 1991 | 1992 | 1993 | 1994 ஒப்புதலளிக்கப்பட்ட மதிப்பீடுகள் | 1994 தற்காலிகம் | 1995 ஒப்புதலளிக்கப்பட்ட மதிப்பீடுகள் |
|---|---|---|---|---|---|---|---|
| **நடைமுறைச் செலவு** ... | **22.3** | **22.5** | **21.1** | **20.5** | **19.2** | **22.0** | **20.2** |
| பொருட்கள் பணிகள் மீதான செலவுகள் ... | 9.4 | 9.6 | 9.3 | 9.0 | 8.4 | 9.5 | 8.4 |
| சம்பளங்களும் கூலிகளும் ... | 4.9 | 4.8 | 4.9 | 5.3 | 4.9 | 5.1 | 5.0 |
| ஏனைய பொருட்களும் பணிகளும் ... | 4.5 | 4.8 | 4.4 | 3.7 | 3.5 | 4.4 | 3.4 |
| வட்டிக் கொடுப்பனவுகள் ... | 6.4 | 5.9 | 6.1 | 6.0 | 6.0 | 6.6 | 5.7 |
| வெளிநாட்டு ... | 1.1 | 1.1 | 1.1 | 1.0 | 1.0 | 1.0 | 1.0 |
| உள்நாட்டு ... | 5.3 | 4.8 | 5.0 | 5.0 | 4.9 | 5.6 | 4.7 |
| நடைமுறை மாற்றல்களும் உதவு தொகைகளும் ... | 6.5 | 6.9 | 5.6 | 5.4 | 4.8 | 5.9 | 6.2 |
| அரச கூட்டுத்தாபனங்களுக்கு ... | 0.8 | 0.5 | 0.3 | 0.3 | 0.4 | 0.5 | 1.2 |
| அரச நிறுவனங்களுக்கு | 0.6 | 0.4 | 0.4 | 0.4 | 0.4 | 0.3 | 0.4 |
| அரசின் ஏனைய மட்டங்களுக்கு ... | 0.4 | 0.3 | 0.3 | 0.2 | 0.2 | 0.2 | 0.2 |
| குடியிருப்புகளும் ஏனைய துறைகளும் ... | 4.7 | 5.8 | 4.7 | 4.5 | 3.9 | 4.9 | 4.4 |
| உணவு முத்திரை, உணவு உதவு தொகை போன்றன | 1.6 | 1.1 | 1.0 | 0.9 | 0.6 | 0.8 | 0.7 |
| சனசக்தி ... | 0.9 | 0.9 | 0.7 | 0.7 | 0.7 | 0.9 | 0.7 |
| ஓய்வூதியங்கள் ... | 1.4 | 2.4 | 1.9 | 2.1 | 1.9 | 2.3 | 2.2 |
| வளமாக்கி உதவு தொகை ... | – | – | – | – | – | 0.1 | 0.2 |
| ஏனையவை ... | 0.8 | 1.4 | 1.0 | 0.8 | 0.6 | 0.8 | 0.6 |
| குறைச் செலவுக்கான ஒதுக்கு ... | – | – | – | – | – | – | – |
| **மூலதனச் செலவு** ... | **6.1** | **6.8** | **5.9** | **6.7** | **6.2** | **5.3** | **6.5** |
| உண்மைச் சொத்துக்களின் கையேற்பு ... | 3.7 | 3.0 | 3.0 | 3.9 | 3.6 | 2.9 | 3.8 |
| மூலதன மாற்றல்கள் ... | 2.3 | 3.0 | 2.9 | 2.8 | 2.6 | 2.4 | 2.7 |
| அரச கூட்டுத்தாபனங்களுக்கு ... | 0.4 | 0.8 | 1.1 | 0.9 | 0.7 | 0.7 | 0.8 |
| அரச நிறுவனங்களுக்கு ... | 1.6 | 1.9 | 1.6 | 1.7 | 1.7 | 1.5 | 1.8 |
| அரசின் ஏனைய மட்டங்களுக்கு ... | 0.3 | 0.3 | 0.2 | 0.2 | 0.1 | 0.2 | 0.2 |
| ஏனையவை ... | – | 0.1 | – | – | – | – | – |
| **மீள் கொடுப்பனவுகள் கழித்த கடன் வழங்கல்** ... | **2.6** | **2.8** | **0.6** | **0.9** | **1.7** | **1.8** | **1.6** |
| இதில் முற்பணக் கணக்குகள் ... | 0.5 | 0.5 | ... | 0.1 | ... | ... | – |
| **மொத்த செலவினமும் தேறிய கடன் வழங்கலும்** ... | **31.0** | **32.1** | **27.5** | **28.1** | **27.1** | **29.0** | **28.3** |

மூலம் : இலங்கை மத்திய வங்கி.

என்பவற்றைப் பேண முடியாது என்பதனை ஆளணியின் ஊதியங்கள் மீதான உயர்ந்த மட்டத்தில் அமைந்த செலவுகள் குறித்துக்காட்டுகின்றன.

நாளாந்த அடிப்படையில் நிதியங்கள் போதுமான அளவில் கிடைக்கத்தக்கதாக இல்லாமையின் காரணமாக ஓரளவு குறைச் செலவை ஏற்படுத்திய சம்பளம் அல்லாத தொழிற்பாட்டு செலவுகளின் மதிப்பிடப்பட்ட வரவு செலவுத் திட்ட ஒதுக்குகளை எதிர்கொள்வதில் உள்ள வழமையான இடர்களின் மத்தியிலும் சம்பளமல்லா தொழிற்பாட்டுச் செலவுகள் ரூ. 253,910 இலட்சத்தில் உயர்வாகவே காணப்பட்டன. இது 37 சதவீத அதிகரிப்பைக் காட்டியதுடன் பாதுகாப்பு தொடர்பான செலவுகளினது உயர்ந்த மட்டத்தையும் தேசிய தேர்தல்களின் மத்தியில் அரசிறைக் கட்டுப்பாடு தளர்ந்தமையையும் பிரதிபலித்தது. ஏனைய விடயங்களில் செலவினைக் குறைப்பதற்கான வாய்ப்புக்கள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளமையால் நடைமுறைச் செலவின் அதிகரிப்பினை மட்டுப்படுத்துவதற்கு இச்செலவினங்களைக் கட்டுப்படுத்துவது அத்தியாவசியமானதாகும்.

முன்னைய ஆண்டின் 16 சதவீத அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் ரூ. 380,310 இலட்சமாக விளங்கிய அரசபடுகடன் மீதான வட்டிக்கொடுப்பனவுகள் 1994 இல் 26 சதவீத அதிகரிப்பைக் கொண்டிருந்தன. 1994 இல் ரூ. 3,001,740 இலட்சங்கொண்ட பாரிய வெளிநாட்டுப் படுகடனின் மத்தியிலும் ரூ. 55,110 இலட்சமாக விளங்கிய வெளிநாட்டுப் படுகடன் மீதான வட்டிக்கொடுப்பனவுகள் இலங்கையின் வெளிநாட்டுக் கடன்களில் காணப்பட்ட உயர்சலுகைத் தன்மையினைப் பிரதிபலிக்கும் வகையில் மிதமான 8 சதவீத அதிகரிப்பையே காட்டியது. இக்கடன்களின் மீதான சராசரி வட்டி கிட்டத்தட்ட 1.8 சதவீதமாக அமைந்து வர்த்தகக் கடன்களுக்கான சந்தை வீதத்தினைவிட மிகத்தாழ்ந்து காணப்பட்டது. மாறாக ரூ. 325,200 இலட்சமாக விளங்கிய உள்நாட்டுப்படுகடன் மீதான வட்டிக்கொடுப்பனவுகள் பாரிய அதிகரிப்பான 30 சதவீதத்தைப் பதிவு செய்து உள்நாட்டுப்படுகடன்/மொத்த உள்நாட்டு உற்பத்தி விகிதத்தினை 1993 இன் 5.0 சதவீதத்திலிருந்து 1994 இல் 5.6 சதவீதத்திற்கு அதிகரிக்கச் செய்தது. உள்நாட்டு வட்டிக்கொடுப்பனவுகளுக்கும் மொத்த உள்நாட்டுக் கடன்களுக்கும் இடையில் அளவிடப்பட்ட விகிதமான சராசரி வட்டி வீதம் 1993 இன் 12 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 13 சதவீதத்தில் காணப்பட்டது.

உள்நாட்டுப் படுகடன் மீதான அதிகரித்த செலவு குறுங்கால (திறைசேரி உண்டியல்கள்) நடுத்தரகால நீண்டகால கடன்கள் (ரூபாப்பிணைகள்) ஆகிய இரண்டிலும் தெளிவாகத் தென்பட்டது. திறைசேரி உண்டியல்களின் மீதான சந்தை வட்டிவீதம் 1993 இன் 17.82-21.98 சதவீத வீச்சிலிருந்து 1994 இல் 12.2-19.36 சதவீத வீச்சிற்கு வீழ்ச்சியடைந்த வேளையில் வெளிநின்ற திறைசேரி உண்டியல் இருப்பு ரூ. 971,960 இலட்சத்திலிருந்து ரூ. 988,960 இலட்சத்திற்கு சிறிதளவே அதிகரித்த போதிலும் திறைசேரி உண்டியல்கள் மீதான வட்டிச்செலவு ரூ. 179,160 இலட்சமாக விளங்கி 1994 இல் குறிப்பிடத்தக்க 38 சதவீத அதிகரிப்பைப் பதிவு செய்து தீவிரமான திறந்த சந்தைத் தொழிற்பாடுகளின் காரணமாக 1993 இல் நிலவிய திறைசேரி உண்டியல்கள் மீதான அதிகரித்த வட்டிவீதங்களின் காலங்கடந்த தாக்கத்தினைப் பிரதிபலித்தது. இதன்படி திறைசேரி உண்டியல் மீது செலுத்தப்பட்ட வட்டிக் கொடுப்பனவுகளுக்கும் மொத்த வெளிநின்ற திறைசேரி உண்டியல்களுக்கும் இடையிலான விகிதமாகிய சராசரி வட்டிவீதம் 1993 இன் 13.3 சதவீதத்திலிருந்து

அட்டவணை 1.61

## செலவின் தொழிற்பாட்டுப் பகுப்பு

பத்து இலட்சம் ரூபாய்களில்

| விடயம் | 1990 | 1991 | 1992 | 1993 | 1994 ஒப்புதலளிக்கப்பட்ட மதிப்பீடுகள் | 1994 தற்காலிகம் | 1995 ஒப்புதலளிக்கப்பட்ட மதிப்பீடுகள் |
|---|---|---|---|---|---|---|---|
| நடைமுறைச் செலவு | | | | | | | |
| பொது அரச பணிகள் ... | 17,942 | 19,811 | 24,453 | 27,564 | 27,214 | 30,444 | 33,049 |
| பொது நிருவாகம் ... | 6,622 | 5,612 | 7,099 | 7,405 | 8,517 | 4,637 | 10,182 |
| பாதுகாப்பு ... | 6,736 | 10,317 | 12,876 | 15,413 | 13,351 | 19,415 | 16,750 |
| பொது ஒழுக்கமும் பாதுகாப்பும் ... | 4,585 | 3,882 | 4,478 | 4,746 | 5,346 | 6,392 | 6,118 |
| சமூகப் பணிகள் ... | 24,449 | 31,594 | 32,700 | 37,477 | 39,604 | 47,656 | 53,032 |
| கல்வி ... | 8,529 | 7,951 | 10,533 | 11,225 | 12,355 | 14,836 | 12,732 |
| நலத்துறை ... | 3,685 | 4,110 | 4,518 | 5,711 | 6,471 | 7,666 | 8,627 |
| நலன்புரி ... | 11,973 | 19,266 | 17,378 | 20,255 | 20,250 | 24,560 | 30,926 |
| வீடமைப்பு ... | – | – | – | – | – | – | – |
| சமூகப் பணிகள் ... | 262 | 267 | 271 | 285 | 528 | 593 | 747 |
| பொருளாதாரப் பணிகள் ... | 5,137 | 3,925 | 3,834 | 4,328 | 5,590 | 6,195 | 7,173 |
| வேளாண்மையும் நீர்ப்பாசனமும் ... | 982 | 912 | 1,398 | 1,483 | 2,017 | 2,506 | 2,968 |
| கடற்றொழில் ... | 46 | 98 | 68 | 107 | 83 | 99 | 133 |
| தயாரிப்பும் சுரங்கமகழ்தலும் ... | 181 | 231 | 349 | 403 | 356 | 351 | 651 |
| வலுவும் நீர்வழங்கலும் ... | 345 | 659 | 133 | 93 | 297 | 518 | 997 |
| போக்குவரத்தும் தொடர்பூட்டலும் ... | 2,600 | 1,308 | 1,208 | 1,346 | 1,944 | 2,024 | 1,517 |
| வியாபாரமும் வர்த்தகமும் ... | 159 | 137 | 232 | 203 | 158 | 72 | 105 |
| ஏனையவை ... | 824 | 580 | 446 | 693 | 735 | 625 | 802 |
| ஏனையவை ... | 24,241 | 28,425 | 28,652 | 32,920 | 36,961 | 42,789 | 40,170 |
| இதில் வட்டி ... | 20,668 | 22,073 | 25,940 | 30,203 | 33,862 | 38,031 | 37,204 |
| குறைச் செலவுக்கான ஒதுக்கு ... | – | – | – | – | – | – | – |
| **மொத்த நடைமுறைச் செலவு** ... | **71,770** | **83,756** | **89,639** | **102,288** | **109,367** | **127,084** | **133,424** |

(தொடரும்)

## அட்டவணை 1.61 (தொடர்ச்சி)

## செலவின் தொழிற்பாட்டுப் பகுப்பு

பத்து இலட்சம் ரூபாய்களில்

| விடயம் | 1990 | 1991 | 1992 | 1993 | 1994 | | 1995 |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | ஒப்புதலளிக் கப்பட்ட மதிப்பீடுகள் | தற்காலிகம் | ஒப்புதலளிக் கப்பட்ட மதிப்பீடுகள் |
| **மூலதனச் செலவும் கடன் வழங்கலும்** | | | | | | | |
| பொது அரச பணிகள் ... | 3,617 | 2,422 | 1,970 | 4,085 | 3,522 | 2,390 | 5,006 |
| பொது நிருவாகம் ... | 1,599 | 1,680 | 1,256 | 3,463 | 2,719 | 1,753 | 3,626 |
| பொது ஒழுக்கமும் பாதுகாப்பும் ... | 2,018 | 742 | 714 | 622 | 803 | 637 | 1,380 |
| சமூகப் பணிகள் ... | 3,019 | 2,964 | 6,137 | 6,075 | 8,056 | 7,677 | 11,140 |
| கல்வி ... | 1,042 | 1,178 | 2,008 | 2,845 | 3,014 | 2,877 | 4,126 |
| நலத்துறை ... | 1,279 | 1,119 | 2,023 | 1,353 | 2,460 | 1,519 | 3,075 |
| நலன்புரி ... | 25 | 15 | 1,191 | 1,084 | 1,289 | 1,681 | 289 |
| வீடமைப்பு ... | 513 | 535 | 767 | 604 | 1,070 | 802 | 2,099 |
| சமூகப் பணிகள் ... | 160 | 117 | 148 | 189 | 223 | 789 | 1,551 |
| பொருளாதாரப் பணிகள் ... | 18,798 | 26,022 | 20,444 | 29,600 | 34,844 | 29,304 | 40,148 |
| வேளாண்மையும் நீர்ப்பாசனமும் ... | 5,215 | 6,071 | 5,890 | 5,682 | 5,308 | 5,179 | 6,171 |
| இதில் மகாவலிச் செயற்றிட்டம் | 1,810 | 2,410 | 2,670 | 2,810 | 2,504 | 2,598 | 2,764 |
| கடற்றொழில் ... | 133 | 181 | 175 | 124 | 381 | 368 | 189 |
| தயாரிப்பும்சுரங்கமகழ்தலும் ... | 120 | 171 | 184 | 1,471 | 72 | 22 | 273 |
| வலுவும் நீர்வழங்கலும் ... | 6,132 | 6,181 | 5,527 | 4,728 | 7,831 | 5,518 | 7,884 |
| போக்குவரத்தும் தொடர்பூட்டலும் ... | 4,319 | 10,921 | 4,363 | 10,165 | 15,923 | 14,522 | 18,639 |
| வியாபாரமும் வர்த்தகமும் ... | 205 | 218 | 365 | 364 | 413 | 182 | 427 |
| ஏனையவை ... | 2,674 | 2,279 | 3,940 | 7,066 | 4,916 | 3,513 | 6,565 |
| ஏனையவை ... | 952 | 1,250 | 1,072 | 1,081 | 826 | 1,084 | 1,161 |
| **மொத்த மூலதனச் செலவும் கடன் வழங்கலும்** | **26,387** | **32,658** | **29,622** | **40,841** | **47,247** | **40,455** | **57,455** |

மூலம் : இலங்கை மத்திய வங்கி.

1994 இல் 18.1 சதவீதத்திற்கு அதிகரித்தது. இதே வேளையில் ரூபாக் கடன்களின் மீதான வட்டிச் செலவுகளும் 1993 இன் ரூ. 117,390 இலட்சத்திலிருந்து 1994 இல் ரூ. 166,800 இலட்சத்திற்கு அதிகரித்தன. ரூபாக் கடன் நிகழ்ச்சித் திட்டங்களின் ஊடான கடன் பெறுகைகளின் அதிகரித்த மட்டமும் குறுங்கால கடன் கருவிகளின் மீது கடந்த 2 ஆண்டுகளில் 15.0 – 18.5 சதவீத வீச்சில் அதிகரிக்கப்பட்ட உயர்வட்டிவீதமும் இதற்கான காரணமாக அமைந்தது. முன்னைய ஆண்டின் திரட்டப்பட்ட ரூபா 282,050 இலட்சம் கொண்ட தொகையுடன் ஒப்பிடுகையில் 1994 இல் திரட்டப்பட்ட மொத்த ரூபாக் கடன்கள் ரூ. 468,780 இலட்சமாக விளங்கின. ரூபாக் கடன்களின் மீதான வட்டிக் கொடுப்பனவுகள் ஆண்டிற்கிருமுறை மேற்கொள்ளப்படுகின்றமையினால் 1994 இன் இரண்டாம் அரைப்பகுதியில் திரட்டப்பட்ட ரூபாக் கடன்களின் வட்டிச் செலவு 1995 இல் பிரதிபலிக்கப்படும்.

உள்நாட்டுப் படுகடன் மீதான அதிகரித்த வட்டிச் செலவினைக் கருத்திற்கொள்ள வேண்டியதற்கான பல காரணங்கள் காணப்படுகின்றன. முதலாவதாக அது மொத்த நடைமுறைச் செலவினத்தில் நான்கில் ஒருபங்கினைக் கொண்டிருந்ததோடு அரசிறை முகாமைத்துவத்தில் கடுமையான பழுவினை ஏற்படுத்தி அரசிறையின் 30 சதவீதத்தினை ஈர்த்துக்கொண்டது. இரண்டாவதாக உயர்ந்த வட்டிச் செலவானது அரசின் ஏனைய செலவினங்களை குறிப்பாக பல்வேறு நிகழ்ச்சித் திட்டங்களின் கீழ் உற்பத்தித்திறன் கொண்ட செலவினங்களை அரசின் செலவுத் தொகுதியிலிருந்து நீக்கி விடுவதன் மூலம் அத்தகைய நடவடிக்கைகளுக்கான அரசின் பங்கினை கடுமையாக மோசமடையச் செய்யக்கூடியதாக இருக்கும். மூன்றாவதாக சந்தைகள் போட்டித் தன்மையுடையதாக மாறியிருக்கின்றமையினாலும் அரசின் கடன் கருவிகள் சந்தையில் வர்த்தகம் செய்யப்படுவதினாலும் நிருவகிக்கப்பட்ட வட்டி வீதங்களில் கடன் திரட்டப்பட்ட கடந்த காலங்களுடன் ஒப்பிடுகையில் அரச படுகடன் மீதான வட்டிச் செலவு உயர்வானதாகக் காணப்படலாம். இத்தகைய சூழலில் அரசின் அரசிறைச் செயலாற்றத்தின் அமைப்புச் சமமின்மையினைச் சீர்படுத்தும் பொருட்டு அரசின் கடன் பெறுகைகளைக் குறைப்பதற்கான உறுதியான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

மொத்த மாற்றல் கொடுப்பனவுகள் ரூ. 343,530 இலட்சமாக விளங்கி முன்னைய ஆண்டின் 14 சதவீத அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் 1994 இல் 26 சதவீத அதிகரிப்பைக் காட்டின. இதன் விளைவாக மொத்த உள்நாட்டு உற்பத்தி தொடர்பான மாற்றல் கொடுப்பனவுகள் 1993 இன் 5.4 சதவீதத்திலிருந்து 1994 இல் 5.9 சதவீதத்திற்கு அதிகரித்தன. மாற்றல் கொடுப்பனவுகளின் அதிகரிப்பின் பெரும்பகுதி ஓய்வூதியக் கொடுப்பனவுகள் 1993 இன் ரூ. 105,160 இலட்சத்திலிருந்து 1994 இல் ரூ. 132,710 இலட்சத்திற்குக் கடுமையாக அதிகரித்தமையின் காரணமாக ஏற்பட்டதாகும். முன்னைய ஆண்டின் 30 சதவீத அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் 1994 இல் ஓய்வூதியங்களில் ஏற்பட்ட 26 சதவீத அதிகரிப்பானது 1993 இலிருந்து வழங்கப்பட்ட ரூ. 260 கொண்ட வாழ்க்கைச் செலவுப்படியின் முழு ஆண்டுத் தாக்கத்தினதும் மேதின நன்மைத் தொதியின் காரணமாக ஓய்வூதியக் கொடுப்பனவுகளில் காணப்பட்ட முரண்பாடுகள் நீக்கப்பட்டமையினால் செலுத்தப்பட்ட நிலுவைக் கொடுப்பனவினதும் 1988 இல் நிறுத்தப்பட்ட வாழ்க்கைச் செலவுப்படியின் நிலுவைகளைச் செலுத்துவதற்கு புதிய அரசாங்கம் மேற்கொண்ட தீர்மானத்தினதும்

இணைந்த விளைவாகும். இதேவேளையில் அதிகரித்த வாழ்நாள் காலம் மற்றும் ஒவ்வொரு ஆண்டிலும் ஓய்வு பெறுபவரின் எண்ணிக்கை அதிகரித்தல் போன்ற நிலைமைகளின் கீழ் ஓய்வூதியம் பெறுவோர்களின் மொத்த எண்ணிக்கையும் 1993 இன் 319,000 இலிருந்து 1994 இல் 330,000 இற்கு அதிகரித்தது. புதிய ஓய்வூதியத் திட்டத்தின் கீழ் 1990 இல் ஓய்வூதிய நன்மைகள் அதிகரிக்கப்பட்டமையானது அரச ஓய்வூதியச் செலவுகளின் அதிகரிப்புக்குப் பங்களிப்புச் செய்துள்ளது. உண்மையில் 1990 இற்கும் 1994 இற்கும் இடையில் அரச ஓய்வூதியச் செலவானது மூன்று மடங்கு அதிகரிப்பைக் காட்டியதோடு அரசின் ஓய்வூதியத் திட்டத்தில் நீண்டகால அமைப்பு சீராக்கத்தின் அவசியத்தையும் எடுத்துக்காட்டியது.

இதேவேளையில் அரசின் மூன்று முக்கிய நலன்புரி நிகழ்ச்சித் திட்டங்களான உணவு மற்றும் மண்ணெண்ணெய் முத்திரை, பாடசாலை மதிய உணவு, சனசக்தி என்பனவற்றின் மீதான அரசின் செலவு 1993 இன் ரூ. 84,410 இலட்சத்துடன் ஒப்பிடுகையில் 1994 இல் ரூ. 103,550 இலட்சமாக விளங்கியது. மொத்த உள்நாட்டு உற்பத்தியின் விகிதமொன்றாக இத்தகைய செலவுகள் 1.7 சதவீதத்திலிருந்து 1.8 சதவீதத்திற்கு அதிகரித்தன. உணவு மற்றும் மண்ணெண்ணெய் முத்திரை மீதான செலவு 3 சதவீத வீழ்ச்சியைக் காட்டிய வேளையில் 1994 மேயிலிருந்து அரசு சனசக்தி மற்றும் பாடசாலை மதிய உணவு, சீருடை நிகழ்ச்சித் திட்டங்களை விரிவாக்கத் தீர்மானித்தமையின் காரணமாக இத்திட்டங்களின் கீழான செலவு குறிப்பிடத்தக்க 35 சதவீதத்தினால் அதிகரித்தது. புதிய அரசு 1994 ஒற்றோபர் நடைமுறைப்படுத்திய 30 சதவீத வளமாக்கி உதவிக் கொடுப்பனவுத் திட்டம் வரவு செலவு திட்டத்தின் மூன்று மாத காலப்பகுதிக்கு ரூ. 6,300 இலட்சம் கொண்ட செலவினை ஏற்படுத்தியது. வடக்கு கிழக்கு மாகாண அகதிகள் மீதான செலவுகள், மற்றும் பள்ளிக்கூட பருவகாலச் சீட்டு, இலவசப் பாடப் புத்தகங்கள் என்பனவற்றையும் உள்ளடக்கிய குடியிருப்பாளருக்கு மாற்றல்கள் மீதான செலவுகள் முன்னைய ஆண்டின் ரூ. 33,780 இலட்சத்திற்கு எதிராக ரூ. 46,370 இலட்சமாக விளங்கின.

தொழிற்பாட்டுப் பகுப்புக்களின் நியதிகளின்படி கல்வி, நலத்துறை, நலன்புரி, வீடமைப்பு மற்றும் சமூகப் பணிகள் போன்ற சமூகப் பணிகளை வழங்குவதற்கான நடைமுறைச் செலவு ரூ. 476,556 இலட்சமாக விளங்கி முன்னைய ஆண்டைவிட 27 சதவீத அதிகரிப்பைக் கொண்டிருந்தது. இவ்வதிகரிப்புக்கு பள்ளிக்கூட மதிய உணவு, சனசக்தி நிகழ்ச்சித் திட்டத்தின் விரிவாக்கம் மற்றும் ஓய்வூதியக் கொடுப்பனவுகளின் கடுமையான அதிகரிப்பு என்பன பெருமளவு காரணமாக அமைந்தன. அரசின் மூலவள ஒதுக்கீட்டில் பக்கச்சார்பு ஒன்றைக் குறித்துக் காட்டும் வகையில் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் விகிதமொன்றாக சமூகப் பணிகள் மீதான செலவினம் 1993 இன் 7.5 சதவீதத்திலிருந்து 1994 இல் 8.2 சதவீதத்திற்கு அதிகரித்தது. பொதுநிருவாகம் மற்றும் பாதுகாப்பு என்பன மீதான நடைமுறைச் செலவு ரூ. 304,440 இலட்சமாக விளங்கி 10 சதவீத அதிகரிப்பைக் காட்டியது.

பாதுகாப்பு தொடர்பான செலவினங்கள் 1993 இன் ரூ. 201,590 இலட்சத்திலிருந்து (மொ. உ. உ. வின் 4.0 சதவீதம்) 1994 இல் ரூபா 258,070 இலட்சத்திற்கு (மொ. உ. உ. வின் 4.5 சதவீதம்) அதிகரித்தமையே இதற்கான முழுமையான காரணமாக அமைந்தது. இதே வேளையில் வேளாண்மை, நீர்ப்பாய்ச்சல்,

மீன்பிடித்தல் போக்குவரத்து, வர்த்தகமும் வாணிபமும் போன்ற பொருளாதார பணிகளின் தொழிற்பாட்டிற்கும் பேணலுக்கும் உற்பத்தியாளர் உதவித்தொகை வழங்கலுக்குமான செலவு ரூ. 61,950 இலட்சமாக விளங்கி 43 சதவீத அதிகரிப்பைக் காட்டியது. 1994 ஒற்றோபரில் வளமாக்கி உதவுதொகை வழங்கப்பட்டமையே இதற்கான பெருமளவு காரணமாக அமைந்தது. அரச செலவினங்களின் தொழிற்பாட்டின் படியான பகுப்பு அட்டவணை 1.61 இல் தரப்பட்டுள்ளது.

## மூலதனச் செலவினமும் தேறிய கடன் வழங்கலும்

மூலதனச் செலவும் தேறிய கடன் வழங்கலும் முன்னைய ஆண்டின் ரூ. 381,720 இலட்சம் அல்லது மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 7.6 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 1994 இல் ரூ. 406,840 இலட்சமாக அல்லது மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 7.0 சதவீதமாக விளங்கியது. அரச முதலீடு 1993 இன் ரூ. 399,270 இலட்சத்துடன் (மொஉஉ வின் 8.0 சதவீதம்) ஒப்பிடுகையில் 1994 இல் ரூ. 404,50 இலட்சமாக (மொ உ உ வின் 7.0 சதவீதம்) விளங்கியது. முற்பணக் கணக்கின் ஊடான உயர்மட்டத்திலான கடன் வழங்கல் (ரூ. 24,620 இலட்சம்), இரு அரச வங்கிகளினதும் ஏனைய தொழில் முயற்சிகளினது மீளமைப்புச் செலவு (ரூ. 37,390 இலட்சம்), தனியார் மயப்படுத்தல் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழான பெறுகைகள் (ரூ. 29,960 இலட்சம், அரச வர்த்தக தொழில் முயற்சிகளுக்கான பழைய கடன்களின் மீட்பு (ரூ. 29,760 இலட்சம்) என்பனவற்றின் காரணமாக ஏனைய தேறிய பொறுப்புக்கள் ரூ. 2,290 இலட்சமாக விளங்கின.

அரச முதலீட்டு நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் மூலதனச் சொத்துக்களின் நிருமாணம் மற்றும் புனரமைப்புக்காகத் தொடர்புடைய அமைச்சுக்களினாலும் திணைக்களங்களினாலும் நேரடியாக மேற்கொள்ளப்பட்ட செலவு 1993 இன் ரூ. 197,190 இலட்சத்திலிருந்து 1994 இல் ரூ. 167,470 இலட்சத்திற்கு வீழ்ச்சியடைந்தது. நியதிச் சபைகளினாலும் அரச கூட்டுத்தாபனங்களினாலும் மேற்கொள்ளப்பட்ட அரச முதலீட்டு நிகழ்ச்சித் திட்டங்கள் ரூ. 136,440 இலட்சத்தினைப் பயன்படுத்தின. இது முன்னைய ஆண்டில் பயன்படுத்தப்பட்ட தொகையினைவிட சிறிது குறைவானதாகும். இதேவேளையில் அரச முதலீட்டு செயற்றிட்டங்களின் நடைமுறைப்படுத்தலுக்காக இலங்கை மின் சபை, இலங்கை துறைமுக அதிகார சபை போன்ற அரச வர்த்தகத் தொழில் முயற்சிகளுக்கு வழங்கப்பட்ட தொடர்கடன் வழங்கல்கள் ரூ. 100,640 இலட்சமாக விளங்கின. எனினும் இச்செயற்றிட்டங்களுக்காக வரவு செலவுத் திட்டத்தில் ஒதுக்கப்பட்ட தொகை ரூ. 120,130 இலட்சமாகும்.

மூலதனச் செலவு மற்றும் கடன் வழங்கல் மீதான தொழிற்பாட்டுப் பகுப்பின் நியதிகளின்படி பொருளாதார உட்கட்டமைப்பு வசதிகள் மீதான அரச முதலீடு 1993 இன் ரூ. 296,000 இலட்சத்துடன் (மொஉஉ வின் 5.9 சதவீதம்) ஒப்பிடுகையில் 1994 இல் ரூ. 293,040 இலட்சமாக (மொஉஉவின் 5.1 சதவீதம்) விளங்கியது. உட்கட்டமைப்பு வசதிகள் மீதான அரச முதலீட்டின் அதிகரித்த ஈடுபாட்டினைப் பிரதிபலிக்கும் வகையில் பொருளாதார உட்கட்டமைப்பு அபிவிருத்திக்கான செலவு அரச முதலீட்டில் 72 சதவீதத்தினைக் கொண்டிருந்தது. வலு, நீர் வழங்கல் வடிகாலமைப்பு மற்றும் துறைமுகப் பணிகளுக்கான அரச முதலீடு கணிசமான அதிகரிப்பைக் காட்டியது. வீடமைப்பு மற்றும் சனசமூகப்

பணிகளின் உட்கட்டமைப்பு வசதிகளின் வழுங்கலுக்கான அரச முதலீடுகளும் 1994 இல் அதிகரித்தன. ரூ. 43,960 இலட்சமாக விளங்கிய கல்வி மற்றும் நலத்துறை மீதான மூலதனச் செலவு 4.7 சதவீதமான மிதமான அதிகரிப்பை மட்டுமே காட்டியது. இதன் விளைவாக, மொத்த உள்நாட்டு உற்பத்தி தொடர்பான அத்தகைய செலவுகள் 1993 இன் 0.84 சதவீதத்திலிருந்து 1994 இல் 0.76 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தன.

அரச முதலீட்டின் தாழ்ந்த மட்டமானது கடுமையாகக் கவனத்திற்கொள்ள வேண்டிய விடயமொன்றாகும். அண்மைய ஆண்டுகளில் அரச முதலீட்டு மட்டம் கடுமையாக வீழ்ச்சியடைந்தது. அரச முதலீடு/மொ.உ.உ விகிதம் 1989 இன் 10.5 சதவீதத்திலிருந்து 1994 இல் 7.0 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது. கடந்த 5 ஆண்டுகளின் அரச முதலீட்டின் சராசரி அதற்கு முந்திய 5 ஆண்டுக்காலப் பகுதியின் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 13.5 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 8.6 சதவீத சராசரியைக் கொண்டிருந்தது. அரச முதலீட்டின் தாழ்ந்த மட்டம் பல காரணங்களினால் ஏற்பட்டதாகும். முதலாவதாக 1989 இலிருந்து வரவு செலவுத் திட்டப் பற்றாக்குறையினை குறைவடையச் செய்வதற்கான அரசிறைச் சீராக்கம் பெரும்பாலும் அரச முதலீட்டுக் குறைப்பின் மூலமே மேற்கொள்ளப்பட்டது. இரண்டாவதாக செயற்றிட்டங்களின் விரைந்த செயற்பாட்டினை தாமதப்படுத்திய சிக்கலான விலைக்கோரல் நடவடிக்கை முறைகளின் காரணமாக மின்வலு மற்றும் தொலைத் தொடர்பு ஆகியவற்றில் வெளிநாட்டு நிதியிடப்பட்ட அரச முதலீட்டுச் செயற்றிட்ங்களில் குறைப்பயன்பாடு காணப்பட்டது. மூன்றாவதாக நாளாந்த தொழிற்பாட்டு செலவுகளின் காரணமாக அரசின் காசு முகாமைத்துவம் கடுமையான பழுவுக்கு உட்பட்டமையினால் கிரமமான முறையில் நிதியங்கள் கிடைக்காமையின் காரணமாக பாரிய உள்நாட்டு மூலவளப் பங்கினைக் கொண்ட செயற்றிட்டங்கள் குறிப்பாக கல்வி மற்றும் நலத்துறை மீதானவை பாதிக்கப்பட்டன. செயற்றிட்டங்களின் நடைமுறைப்படுத்தலில் கணிசமான சோர்வு காணப்பட்டமையின் காரணமாக, மீளச் செலுத்தப்பட வேண்டிய வெளிநாட்டு உதவிகள் பேரிலான பகிர்ந்தளிப்புக்கள் குறைவாக இருந்தமை இந்நிலைமையை மேலும் கடினமாக்கின. நான்காவது அரச முதலீட்டுச் செயற்றிட்டங்களின் கண்காணிப்பிலும் நடைமுறைப்படுத்தல்களின் தாமதங்களுக்கான நிவர்த்தி நடவடிக்கைகளை மேற்கொள்வதிலும் கணிசமான நலிவு காணப்படுகின்றது. இலங்கையின் முதலீட்டுக்கு உதவுநர்கள் கணிசமாக ஆதரவு வழுங்குகின்ற சூழலில் வெளிநாட்டுச் சலுகைக் கடன்களின் கணிசமான பாகமொன்றினை நாடு இழக்கின்றமையினால் அந்தக் குறைபாடுகள் முன்னுரிமை நோக்கில் கவனிக்கப்பட வேண்டியது அத்தியாவசியமாகும்.

1994 இல் தனியார் மயமாக்கல் மூலமான பெறுகைகள் ரூ. 29,960 இலட்சமாக விளங்கின. இப்பெறுகைகள் 1993 இறுதியிலும் 1994 தொடக்கத்திலும் தனியார் மயப்படுத்தப்பட்ட புத்தளம் சீமெந்து போன்ற தொழில் முயற்சிகளிலிருந்து பெறப்பட்டன. எனினும் தேசிய தேர்தல் மற்றும் 1994 ஓகத்தில் அரசாங்கம் மாற்றமடைந்தமை என்பனவற்றின் காரணமாக நடைமுறைப்படுத்தப்பட்டுக் கொண்டிருந்த தனியார் மயமாக்கல் நிகழ்ச்சித் திட்டங்கள் இவ்வாண்டில் பின்னடைந்தன. இதேவேளையில் அரச தொழில் முயற்சிகளின் கடன்மீளக் கொடுப்பனவுகள் ரூ. 29,760 இலட்சமாக விளங்கின. இம்மீளக் கொடுப்பனவுகளின் பெரும் பகுதி இலங்கை மின்சபையிலிருந்து பெறப்பட்டது.

அரச வங்கிகள் இரண்டினதும் மீளமைப்பு நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட முறிகளின் பேரிலான வட்டிக் கொடுப்பனவுச் செலவுகள், தற்போது நடைபெற்றுக்கொண்டிருக்கும் அரச தொழில் முயற்சிகளின் தனியார் மயப்படுத்தல் நிகழ்ச்சித் திட்டங்களின் மீளமைப்புச் செலவுகள் என்பன ரூ. 37,390 இலட்சமாக விளங்கின. மேதின நிவாரண நடவடிக்கையில் அறிவிக்கப்பட்டதனைத் தொடர்ந்து அரச ஊழியர்களுக்கான கடன் வசதிகளைத் தளர்த்தியமை, பொதுக்களஞ்சியம் மற்றும் புகைவண்டித் திணைக்களம் ஆகியவற்றின் கீழான அதிகரித்த செலவுகள் என்பனவற்றின் காரணமாக முற்பணக் கணக்குத் தொழிற்பாடு தொடர்பான கடன் வழங்கலும் 1994 இல் அதிகரித்தது. முற்பணக் கணக்குகளின் மீதான தேறிய கடன் வழங்கல்கள் முந்திய ஆண்டின் ரூ. 4,100 இலட்சத்துடன் ஒப்பிடுகையில் 1994 இல் ரூ. 24,620 இலட்சமாக விளங்கின.

## வரவு செலவுத் திட்டப் பற்றாக் குறையினை நிதியிடல்

1994 இல் வரவு செலவுத் திட்டப் பற்றாக்குறை ரூ. 494,730 இலட்சமாக (கொடைகளின் பின்) விளங்கி முன்னைய ஆண்டின் பற்றாக்குறையான ரூ. 340,960 இலட்சத்தினைவிட 45 சதவீத அதிகரிப்பைக் கொண்டிருந்தது. 1994 இல் ரூ. 193,840 இலட்சங்கொண்ட மொத்த வெளிநாட்டுக்கடன் பெறுகைகள் 15 சதவீத அதிகரிப்பைக் காட்டியபோதிலும் வெளிநாட்டுக்கடன் தீர்ப்பனவுகள் 1993 இன் ரூ. 69,840 இலட்சத்திலிருந்து 1994 இல் ரூ. 76,060 இலட்சத்திற்கு அதிகரித்தமையின் காரணமாக, வெளிநாட்டுத் தேறிய கடன் பெறுகைகள் 1993 இன் ரூ. 98,550 இலட்சத்திற்கெதிராக ரூ. 117,780 இலட்சமாக அமைந்தன. மொத்த உள்நாட்டு உற்பத்தியின் விகிதமொன்றாக தேறிய வெளிநாட்டுக்கடன் பெறுகைகள் முன்னைய ஆண்டைப்போலவே 2.0 சதவீதத்தில் மாறாது காணப்பட்டன. அரசின் வரவு செலவுத்திட்டத் தொழிற்பாட்டின் குறிப்பாக நடைமுறைக்கணக்கு நடவடிக்கைகளில் பாரிய மூலவள இடைவெளியொன்றினைப் பிரதிபலிக்கும் வகையில் பற்றாக்குறையின் பாகமொன்றாக (கொடைகளின் பின்) தேறிய வெளிநாட்டுக் கடன் பெறுகைகள் 1993 இன் 29 சதவீதத்திலிருந்து 1994 இல் 24 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தன. இதன்படி 1994 இல் ரூ. 376,960 இலட்சமாக விளங்கிய தேறிய உள்நாட்டுக்கடன் பெறுகைகள் மிகக்குறிப்பிடத்தக்க 56 சதவீத அதிகரிப்பைக்காட்டின. இதன் விளைவாக மொத்த உள்நாட்டு உற்பத்தி தொடர்பான உள்நாட்டு நிதியிடல் 1993 இன் 4.9 சதவீதத்திலிருந்து 1994 இல் 6.5 சதவீதத்திற்கு அதிகரித்து வரவு செலவுத் திட்டத்திற்கு மேலும் கடன் சுமையை ஏற்படுத்தியது.

ரூபாக் கடன்களின் மூலமான மொத்தக்கடன்பாடுகள் முன்னைய ஆண்டின் ரூ. 282,050 இலட்சத்துடன் ஒப்பிடுகையில் ரூ. 468,780 இலட்சமாக விளங்கின. எனினும் ரூ. 149,560 இலட்சங்கொண்ட மீள் கொடுப்பனவுகளின் காரணமாக ரூபாக் கடன் நிகழ்ச்சித் திட்டங்களின் ஊடான தேறிய கடன்பாடுகள் முன்னைய ஆண்டின் ரூ. 79,740 இலட்சத்திற்கெதிராக 1994 இல் ரூ. 319,220 இலட்சமாக விளங்கின. முன்னைய ஆண்டுகளைப் போலவே ஊழியர் சேமநிதிய நிதியங்களில் 95 சதவீதத்திற்கு மேற்பட்டவை ரூபாப்பிணைகளில் முதலீடு செய்யப்பட்டன. 1994 இல் ஊழியர் சேமநிதியத்தினால் ரூபாப்பிணைகளில் முதலீடு செய்யப்பட்ட மொத்தத் தொகை 1993 இன் ரூ. 213,590 இலட்சத்துடன் ஒப்பிடுகையில் 1994 இல் ரூ. 253,520 இலட்சமாக விளங்கியது. தேசிய சேமிப்பு வங்கியும் திறைசேரி

உண்டியல்களிலிருந்தான ரூபாப்பிணைகளுக்கு மாறி 1994 இல் ரூபாக் கடன்களின் கவர்ச்சிகரமான வட்டிவீதங்களின் காரணமாக 1994 இல் ரூ. 195,950 இலட்சத்தினை முதலீடு செய்தது.


1994 இல் இறைச் செயலாற்றத்தின் பாரிய மூலவள இடைவெளியின் காரணமாக வரவு செலவுத் திட்டத்தினை நிதியிடுவதற்காக அரசுக்கு வங்கித் தொழில் முறையிலிருந்து கடன்களை நாடவேண்டியேற்பட்டது. இலங்கை மத்திய வங்கியுடனான அரசின் காசு நிலுவைகள் ரூ. 17,620 இலட்சத்திற்கு அதிகரித்தபோதிலும் ரூ. 18,640 இலட்சங்கொண்ட மத்திய வங்கித் தற்காலிக முற்பணங்களின் பயன்பாடும், திறைசேரி உண்டியல்கள் மூலமான ரூ. 11,450 இலட்சங்கொண்ட மேலதிகக் கடன்பாடும் ஏனைய கொடுக்கல் வாங்கல் நடவடிக்கைகளும் 1994 இல் ரூ. 11,570 இலட்சங்கொண்ட தேறிய கடன் பெறுகையை உருவாக்கியதோடு பொருளாதாரத்தில் ஒதுக்குப் பணத்தின் (உயர்வலு நாணயம்) விரிவாக்கத்துக்கும் பங்களிப்புச் செய்தது.

எனினும், வர்த்தக வங்கிகளிலிருந்தான அரசின் தேறிய கடன்பாடுகள் ரூ. 20,150 இலட்சத்தினால் அதிகரித்தபோதிலும் 1994 இல் அரசின் வைப்பு நிலுவைகள் ரூ. 29,860 இலட்சத்தினால் அதிகரித்தமையின் காரணமாக வர்த்தக வங்கிகளிலிருந்தான அரசுக்கான தேறிய கொடுகடன் ரூ. 6,050 இலட்சத்தினால் வீழ்ச்சியடைந்தது. உயர்ந்தவட்டி வீதங்களைக் கொண்ட அரச பிணைகளை வழங்குவதன் மூலம் அதிகரித்த உள்நாட்டுக் கடன்களைப் பெறுகின்ற சூழலில் மத்திய வங்கி, வர்த்தக வங்கிகள் ஆகிய இரண்டிலும் ரூ. 39,970 இலட்சம் வரையிலான அரசின் வைப்பு நிலுவைகளின் அதிகரிப்பானது அரசின் வரவு செலவுத்திட்டத் தொழிற்பாட்டில் உயர்வான வட்டிச்சுமையினைக் குறைப்பதற்கு அரசின் காசு முகாமைத்துவம் மேலும் மேம்பாடடையவேண்டும் என்பதைக் குறிப்பிட்டுக் காட்டுகின்றது.

### அரசபடுகடன்

1994 இறுதியில் ரூ. 5,492,460 இலட்சமாக விளங்கிய வெளிநின்ற அரசபடுகடன் 14 சதவீதம் அதிகமானதாகும். 1994 இல் மொத்தப்படுகடன்/மொத்த உள்நாட்டு உற்பத்தி விகிதம் 1993 இன் 97 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 95 சதவீதமாகக் காணப்பட்டது. அரச படுகடனின் 45 சதவீதத்திற்கு வகைகூறும் மொத்த உள்நாட்டுப்படுகடன் 1993 இறுதியின் ரூ. 2,136,850 இலட்சத்திலிருந்து 1994 இறுதியில் ரூ. 2,491,180 இலட்சத்திற்கு 17 சதவீதத்தினால் அதிகரித்த வேளையில் வெளிநாட்டுப்படுகடன் ரூ. 2,702,240 இலட்சத்திலிருந்து ரூ. 3,001,740 இலட்சத்திற்கு 11 சதவீதத்தினால் அதிகரித்தது. மொத்த உள்நாட்டு உற்பத்தி தொடர்பாக மொத்த உள்நாட்டுப்படுகடன் முன்னைய ஆண்டின் மட்டமான 43 சதவீதத்தில் மாறாது காணப்பட்டது. 1994 திசெம்பர் இறுதியில் நடுத்தர நீண்டகால உள்நாட்டுப்படுகடன் ரூ. 285,520 இலட்சத்தினால் ரூ. 1,403,920 இலட்சத்திற்கு அதிகரித்தவேளையில் குறுகியகால படுகடன் ரூ. 68,810 இலட்சத்தினால் ரூ. 1,087,260 இலட்சத்திற்கு அதிகரித்து அரசின் படுகடன் தோற்றப்பாட்டில் நடுத்தரகால நீண்டகால கடன்களை நோக்கிய அசைவினைப் பிரதிபலித்தது. அதன் விளைவாக மொத்த உள்நாட்டுப்படுகடனில் நீண்டகாலக் கடன்களின் பங்கு 1993 இன் 52 சதவீதத்திலிருந்து 1994 இல் 56 சதவீதத்திற்கு அதிகரித்தது.

அரச படுகடனின் உள்ளடக்கம்




• கடன்கரைப்பு நிதியங்கள் நீங்கலாக மொத்தப்படுகடன்

இலங்கை மத்திய வங்கி

*1994 இறுதியில் வெளிநாட்டுப்படுகடனின் மீதான வெளிநின்ற பொறுப்பு ரூ. 299,500 இலட்சத்தினால் ரூ. 3,001,740 இலட்சத்திற்கு அதிகரித்தது. எனினும் வெளிநாட்டுப்படுகடன் மீதான அதிகரித்த பொறுப்பாகிய ரூ. 181,720 இலட்சம் அல்லது 61 சதவீதம் வெலாவணிவீத மாறுபாடுகளின் காரணமாக ஏற்பட்டதாகும். வெளிநின்ற மொத்தப்படுகடனில் வெளிநாட்டுப்படுகடன் 1993 இறுதியின் 56 சதவீதத்திற் கெதிராக 1994 இறுதியில் 55 சதவீதத்திற்கு வகை கூறியது. 1994 இல் வெளிநின்ற வெளிநாட்டுப்படுகடனில் கிட்டத்தட்ட 97 சதவீதமானவை பல்புடை அல்லது இருபுடை கடன் மூலங்களிலிருந்து பெறப்பட்ட சலுகைக் கடன்களாகக் காணப்பட்டன. மொத்த உள்நாட்டு உற்பத்தி தொடர்பான வெளிநாட்டுப்படுகடன் 1993 இன் 54.1 சதவீதத்திலிருந்து 1994 இல் 51.9 சதவீதத்திற்கு சிறிதளவால் வீழ்ச்சியடைந்தது.*

**உள்நாட்டுப் படுகடன்**

*1994 இறுதியில் ரூ. 2,491,180 இலட்சமாக விளங்கிய உள்நாட்டுப்படுகடன் 1993 இறுதியில் ரூ. 2,136,850 இலட்சமாக விளங்கிய கடன் இருப்பினை விட 17 சதவீத அதிகரிப்பைப் பதிவு செய்தது. ரூ. 1,087,260 இலட்சமாக விளங்கிய குறுகியகாலப்படுகடன் (ஓராண்டு அல்லது ஓராண்டுக்குக் குறைவான முதிர்ச்சிக்காலம்) 1993 இன் 4 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 7 சதவீத அதிகரிப்பைப் பதிவு செய்தது. குறுகியகால திறைசேரி உண்டியல்கள் மீதான வெளிநின்ற பொறுப்பு ரூ. 963,600 இலட்சமாக விளங்கி மொத்த குறுகியகாலப் படுகடனில் 89 சதவீதத்திற்கு வகைகூறியது. இரண்டு ஆண்டு முதிர்ச்சிக் காலத்தைக் கொண்ட ரூ. 25,350 இலட்சங்கொண்ட திறைசேரி உண்டியல்களுடன் ஒன்று சேர்ந்து இது திறைசேரி உண்டியல்களின் மீதான மொத்த வெளி நின்ற பொறுப்பை உருவாக்கியது. மொத்தப் பொறுப்பு 1993 இறுதியின் ரூ. 971,960 இலட்சத்திலிருந்து 1994 இறுதியில் ரூ. 988,950 இலட்சத்திற்கு அதிகரித்தது. அரசின் எஞ்சிய குறுங்கால படுகடனுக்கு வகைகூறிய மத்திய வங்கியின் தற்காலிக முற்பணங்கள் 1994 இறுதியில் ரூ. 18,640 இலட்சத்தினால் ரூ. 123,660 இலட்சத்திற்கு அதிகரித்தன.*

*1993 இல் அரச வங்கிகள் இரண்டினது மீள் அமைப்பு நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட ரூ. 240,880 இலட்சம் கொண்ட நீண்டகால முறிகளையும் (30 ஆண்டுகள் முதிர்ச்சிக் காலம்) உள்ளடக்கிய ரூபாக் கடன்களின் மீதான வெளிநின்ற பொறுப்பு ரூ. 1,375,540 இலட்சமாக விளங்கி மொத்த நீண்டகால, நடுத்தரகால முறிகளில் 98 சதவீதத்திற்கு வகை கூறியது. அரசின் உள்நாட்டுக் கடன் தேவைப்பாடுகளில் பெரும்பங்கு ரூபாக் கடன்களின் வழங்கல் மூலம் பெறப்படுகின்றமையினால் ரூபாக் கடன்களின் மீதான வெளிநின்ற பொறுப்பு முன்னைய ஆண்டின் இறுதியின் எண்தொகையாகிய ரூ. 1,057,070 இலட்சத்தினை விட ரூ. 318,470 இலட்சம் அல்லது 30 சதவீத அதிகரிப்பைப் பதிவு செய்தது. இவ்வதிகரிப்பானது 1994 இல் ரூ. 468,780 இலட்சங்கொண்ட ரூபாக்கடன்களின் வழங்கலினதும் ரூ. 149,560 இலட்சங்கொண்ட மீளச் செலுத்தலினதும் விளைவாகும். 1994 இல் 4-5 ஆண்டு முதிர்ச்சிக் காலங்களுக்கு வழங்கப்பட்ட ரூபாக் கடன்களில் அறுபது சதவீதத்திற்கு மேலானவை ஆண்டொன்றுக்கு 16½ சதவீத வட்டியைக் கொண்டிருந்தன. ஆறு ஆண்டுகளுக்கு மேற்பட்ட முதிர்ச்சிக் காலத்தைக்கொண்ட புதிய வழங்கல்களில் கிட்டத்தட்ட 27 சதவீதமானவை*

அட்டவணை 1.62

## மத்திய அரசின் வெளிநின்ற படுகடன் (கால முடிவில்)

ரூபா பத்து இலட்சம்

| | 1990 | 1991 | 1992 | 1993 | 1994 தற்காலிகம் |
|---|---|---|---|---|---|
| மொத்த உள்நாட்டுப் படுகடன் ... | 133,898 | 152,119 | 170,020 | 213,685 | 249,118 |
| குறுகிய கால ... | 74,376 | 84,412 | 97,924 | 101,845 | 108,726 |
| திறைசேரி உண்டியல்கள் ... | 67,968 | 72,968 | 84,996 | 91,343 | 96,360 |
| ரூபாப் பிணைகள் ... | – | 4,000 | 4,000 | – | – |
| தற்காலிக முற்பணங்கள் ... | 6,408 | 7,444 | 8,928 | 10,502 | 12,366 |
| நடுத்தர நீண்டகால ... | 59,522 | 67,707 | 72,096 | 111,840 | 140,392 |
| ரூபாப் பிணைகள் (அ) ... | 54,677 | 62,823 | 65,180 | 105,707 | 137,554 |
| திறைசேரி உண்டியல்கள் ... | – | – | 2,100 | 5,853 | 2,535 |
| தேசிய பாதுகாப்பு முறிகள் ... | 4,532 | 4,532 | 4,532 | – | – |
| திறைசேரிவைப்புச் சான்றிதழ்கள் ... | 109 | 153 | 102 | 114 | 145 |
| வரி ஒதுக்குச் சான்றிதழ்கள் ... | 9 | 9 | 8 | 8 | 7 |
| ஏனையவை ... | 195 | 190 | 174 | 158 | 151 |
| படுகடன் கருவிகளின்படி ... | 133,898 | 152,120 | 170,020 | 213,685 | 249,118 |
| ரூபாப் பிணைகள் ... | 54,676 | 66,823 | 69,180 | 105,707 | 137,554 |
| திறைசேரி உண்டியல்கள் ... | 67,968 | 72,968 | 87,096 | 97,196 | 98,896 |
| தேசிய பாதுகாப்பு முறிகள் ... | 4,532 | 4,532 | 4,532 | – | – |
| திறைசேரி வைப்புச் சான்றிதழ்கள் ... | 109 | 153 | 102 | 114 | 145 |
| வரி ஒதுக்குச் சான்றிதழ்கள் ... | 9 | 9 | 8 | 8 | 7 |
| தற்காலிக முற்பணங்கள் ... | 6,408 | 7,444 | 8,928 | 10,502 | 12,366 |
| ஏனையவை ... | 196 | 191 | 174 | 158 | 151 |
| நிறுவனங்களின்படி ... | 133,898 | 152,120 | 170,020 | 213,684 | 249,118 |
| வங்கிகள் ... | 48,254 | 52,145 | 58,111 | 90,134 | 100,043 |
| மத்திய வங்கி ... | | | | | |
| படுகடன் கருவிகளின்படி ... | 37,080 | 42,486 | 34,932 | 16,480 | 21,345 |
| ரூபாக் கடன்கள் ... | 18 | 10 | 6 | – | – |
| திறைசேரி உண்டியல்கள் ... | 30,654 | 35,032 | 25,998 | 5,978 | 8,979 |
| தற்காலிக முற்பணங்கள் ... | 6,408 | 7,444 | 8,928 | 10,502 | 12,366 |
| வர்த்தக வங்கி ... | | | | | |
| படுகடன் கருவிகளின்படி ... | 11,175 | 9,659 | 23,179 | 73,654 | 78,698 |
| ரூபாக் கடன்கள் ... | 565 | 414 | 413 | 24,088 | 24,840 |
| திறைசேரி உண்டியல்கள் ... | 10,604 | 9,239 | 22,760 | 49,566 | 53,858 |
| தேசிய பாதுகாப்பு முறிகள் ... | 5 | 5 | 5 | – | – |
| ஏனையவை ... | 1 | 1 | 1 | – | – |
| நிறுவனங்களின்படி ... | 11,175 | 9,659 | 23,179 | 73,654 | 78,698 |
| இலங்கை வங்கி ... | 6,841 | 6,791 | 15,753 | 40,333 | 39,469 |
| மக்கள் வங்கி ... | 2,062 | 2,182 | 2,938 | 15,690 | 18,363 |
| ஏனையவை ... | 2,272 | 686 | 4,488 | 17,630 | 20,867 |

(அ) 1993 இன் ரூ. 240,880 இலட்சம் கொண்ட நீண்டகால முறிகள் உட்பட

(தொடரும்)

## அட்டவணை 1.62 (தொடர்ச்சி)


## மத்திய அரசின் வெளிநின்ற படுகடன் (கால முடிவில்)

ரூபா பத்து இலட்சம்

| | 1990 | 1991 | 1992 | 1993 | 1994 தற்காலிகம் |
|---|---|---|---|---|---|
| கடன்கரைப்பு நிதியம் | 1,662 | 840 | 359 | 239 | 137 |
| ரூபாக் கடன்கள் | 1,662 | 840 | 359 | 239 | 137 |
| வங்கியல்லாத் துறை | | | | | |
| படுகடன் கருவிகளின்படி | 83,982 | 99,134 | 111,550 | 123,311 | 148,938 |
| ரூபாக் கடன்கள் | 52,432 | 65,559 | 68,402 | 81,379 | 112,577 |
| திறைசேரி உண்டியல்கள் | 26,710 | 28,697 | 38,338 | 41,652 | 36,059 |
| தேசிய பாதுகாப்பு முறிகள் | 4,527 | 4,527 | 4,527 | _ | – |
| திறைசேரி வைப்புச் சான்றிதழ்கள் | 109 | 153 | 102 | 114 | 145 |
| வரி ஒதுக்குச் சான்றிதழ்கள் | 9 | 9 | 8 | 8 | 7 |
| ஏனையவை | 195 | 190 | 173 | 158 | 151 |
| நிறுவனங்களின்படி | 83,982 | 99,134 | 111,551 | 123,311 | 148,939 |
| தேசிய சேமிப்பு வங்கி | 24,089 | 26,558 | 30,782 | 37,767 | 46,407 |
| சேமிப்பு நிறுவனமும் தனிப்பட்டோரும் | 13,018 | 13,031 | 14,981 | 13,165 | 15,813 |
| ஊழியர் சேம நிதியம் | 36,851 | 45,862 | 54,563 | 65,645 | 79,745 |
| காப்புறுதி நிறுவனங்கள் | 3,426 | 4,074 | 4,035 | 244 | 312 |
| நிதி நிறுவனங்கள் | 1,446 | 2,427 | 3,131 | 5,868 | 5,942 |
| ஏனையவை | 5,153 | 7,182 | 4,060 | 622 | 720 |
| திணைக்கள, அலுவல்சார் நிதி | 62 | 34 | 428 | 453 | 556 |
| வெளிநாட்டு நிருவாகக் கடன்பாடுகள் | 195 | 190 | 174 | 158 | 151 |
| மொத்த வெளிநாட்டுப் படுகடன் | 176,883 | 214,579 | 235,538 | 270,224 | 300,174 |
| வகைகளின்படி | 176,883 | 214,579 | 235,538 | 270,224 | 300,174 |
| செயற்றிட்டக் கடன்கள் | 132,338 | 166,149 | 185,003 | 216,355 | 244,819 |
| செயற்றிட்டமல்லாக் கடன்கள் | 44,545 | 48,430 | 50,536 | 53,869 | 55,355 |
| பண்டக் கடன்கள் | 43,393 | 46,037 | 48,550 | 52,120 | 63,727 |
| ஏனையவை | 1,152 | 2,393 | 1,986 | 1,749 | 1,629 |
| நிறுவனங்களின்படி | 176,883 | 214,579 | 235,538 | 270,224 | 300,174 |
| சலுகை அடிப்படையிலான கடன்கள் | 166,202 | 202,554 | 225,132 | 260,557 | 291,437 |
| பல்புடை | 59,526 | 78,084 | 91,067 | 109,283 | 122,852 |
| இருபுடை | 106,677 | 124,470 | 134,065 | 151,273 | 168,585 |
| வர்த்தகக் கடன்கள் | 10,680 | 12,024 | 10,406 | 9,667 | 8,737 |
| வெளிநாட்டு நிரம்பலர் கொடுகடன் | 107 | 1,260 | 1,094 | 1,065 | 950 |
| மொத்த வெளிநின்ற அரச படுகடன் | 310,780 | 366,698 | 405,558 | 483,909 | 549,292 |
| கடன் கரைப்பு நிதியம் நீங்கலான வெளிநின்ற மொத்த அரச படுகடன் | 309,119 | 365,858 | 405,199 | 483,589 | 549,246 |

மூலம் : இலங்கை மத்திய வங்கி


## உள்நாட்டுப் படுகடனின் உள்ளடக்கம்




* கடன்கரைப்பு நிதியங்கள் நீங்கலாக மொத்த உள்நாட்டுப்படுகடன்

இலங்கை மத்திய வங்கி

## வெளிநாட்டுப் படுகடனின் உள்ளடக்கம்




இலங்கை மத்திய வங்கி

## அட்டவணை 1.63

## வெளிநாட்டுக் கடன்கள் மீதான செலாவணி வீதத் தளம்பல்களின் தாக்கம் 1990 – 1994 (அ)

பத்து இலட்சம் ரூபாய்களில்

| விடயம் | 1990 | 1991 | 1992 | 1993 | 1994* |
|---|---|---|---|---|---|
| 1. மொத்த வரவுகள் .. .. | 16,550 | 25,969 | 15,316 | 16,839 | 19,384 |
| 2. மீளக் கொடுப்பனவுகள் ... ... | 4,451 | 4,881 | 7,955 | 6,984 | 7,606 |
| 3. தேறிய வரவுகள் ... ... | 12,099 | 21,088 | 7,361 | 9,855 | 11,778 |
| 4. செலாவணி வீதத் தளம்பலினால் பொறுப்பில் ஏற்பட்ட மாற்றம் ... | 8,486 | 16,607 | 13,599 | 24,831 | 18,172 |
| 5. காலப் பகுதி முடிவில் உள்ள பொறுப்பு ... ... | 176,883 | 214,578 | 235,538 | 270,224 | 300,173 |

(அ) தரவுகள் பதிவுசெய்யப்படும் நாளிலுள்ள பெறுமதி முறையை அடிப்படையாகக் கொண்டவை.

மூலம் : இலங்கை மத்திய வங்கி.

* தற்காலிகமானவை

அட்டவணை 1.64

அரசின் படுகடன் பணிக் கொடுப்பனவுகள் - (1990 - 1994)

| | 1990 | 1991 | 1992 | 1993 | 1994* |
|---|---|---|---|---|---|
| படுகடன் பணிக் கொடுப்பனவுகள் ... | 32,878 | 39,885 | 52,018 | 57,286 | 60,702 |
| (i) கடன் தீர்ப்பனவுகள் ... | 12,210 | 17,782 | 26,078 | 27,290 | 22,671 |
| (அ) உள்நாட்டு ... | 7,304 | 12,901 | 18,123 | 20,327 | 15,065 |
| (ஆ) வெளிநாட்டு ... | 4,906 | 4,881 | 7,955 | 6,963 | 7,606 |
| (ii) வட்டிக் கொடுப்பனவுகள் ... | 20,668 | 22,073 | 25,940 | 30,203 | 38,031 |
| (அ) உள்நாட்டு ... | 16,990 | 17,960 | 21,201 | 25,101 | 32,520 |
| குறுங்காலம் ... | 9,563 | 10,410 | 11,923 | 13,351 | 18,712 |
| நடுத்தர, நீண்டகாலம் ... | 7,427 | 7,550 | 9,278 | 11,750 | 13,808 |
| (ஆ) வெளிநாட்டு ... | 3,678 | 4,113 | 4,739 | 5,102 | 5,511 |
| வட்டி/ நடைமுறைச் செலவு (%) ... | 28.8 | 26.4 | 28.9 | 29.9 | 29.9 |
| படுகடன் பணி/ மொ. உ. உ. (%) ... | 10.2 | 10.7 | 12.2 | 11.5 | 10.5 |

மூலம் : இலங்கை மத்திய வங்கி

* தற்காலிகமானவை

14.0 – 14.5 சதவீத வீச்சிலான வட்டிவீதங்களைக் கொண்டிருந்த வேளையில் எஞ்சியவை 3 – 4 ஆண்டு முதிர்ச்சிக் காலத்தையும் 14.5 – 15.0 சதவீத வீச்சிலான வட்டி வீதத்தையும் கொண்டிருந்தன. ஊழியர் சேமநிதியமும் தேசிய சேமிப்பு வங்கியும் தொடர்ந்தும் ரூபாக்கடன் நிகழ்ச்சித் திட்டத்தின் முதன்மை உதவு தொகை வழங்குனர்களாக விளங்கி 1994 இறுதியில் மொத்த வெளிநின்ற ரூபாக் கடன்களில் கிட்டத்தட்ட 80 சதவீதத்திற்கு வகை கூறின.

## வெளிநாட்டுப் படுகடன்

1994 இறுதியில் ரூ. 3,001,740 இலட்சமாக விளங்கிய மொத்த வெளிநின்ற வெளிநாட்டுப்படுகடன் முன்னைய ஆண்டைவிட ரூபா 299,500 இலட்சம் அல்லது 11 சதவீத அதிகரிப்பைக் கொண்டிருந்தது. வெளிநாட்டுப்படுகடனின் இந்த அதிகரிப்பானது ரூ. 193,840 இலட்சம் கொண்ட மொத்தக் கடன் பெறுகைகளினதும் ரூ. 76,060 இலட்சங்கொண்ட மீளச் செலுத்தலினதும் செலாவணிவீத மாறுபாடுகளின் காரணமாக வெளிநின்ற பொறுப்பு ரூ. 181,720 இலட்சத்தினால் அதிகரித்தமையினதும் விளைவாகும். ரூ. 2,914,370 இலட்சமாக விளங்கிய சலுகைக் கடன்களின் மீதான வெளிநின்ற பொறுப்பு முன்னைய ஆண்டினைவிட ரூ. 308,800 இலட்சத்தினால் அதிகரித்து மொத்த வெளிநின்ற வெளிநாட்டுப் படுகடனில் 1993 இறுதியின் 96 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 97 சதவீதத்திற்கு வகைகூறியது. ரூ. 1,685,850 இலட்சமாக விளங்கிய இருபுடைக் கடன்கள் சலுகைக் கடன்களில் 58 சதவீதத்தைக் கொண்டிருந்த வேளையில் எஞ்சிய ரூ. 1,228,520 இலட்சம் பல்புடை ஒப்பந்தங்களின் மூலமாகப் பெறப்பட்டவையாகும்.

செயற்றிட்ட மற்றும் நிகழ்ச்சித் திட்டக் கடன்களின் மீதான பொறுப்புக்கள் 1994 இறுதியில் ரூ. 2,448,190 இலட்சமாக விளங்கி இவ்வாண்டின் தேறிய கடன்பெறுகையான ரூ. 129,950 இலட்சத்தினை உள்ளடக்கியிருந்த வேளையில் செலாவணிவீத மாறுபாடுகளின் விளைவாக ஏற்பட்ட மேலதிக பொறுப்பாகிய ரூ. 147,750 இலட்சத்தையும் கொண்டிருந்தது. பண்டக் கடன்களின் மீதான வெளிநின்ற பொறுப்பு 1993 திசெம்பர் இறுதியின் ரூ. 521,200 இலட்சத்திலிருந்து ரூ. 537,270 இலட்சத்திற்கு அதிகரித்தது. செயற்றிட்டக் கடன்களில் 97 சதவீதமும், மற்றும் பண்டக் கடன்கள் முழுவதும் சலுகைக் கடன்களாக விளங்கின. வெளிநாட்டுப் படுகடன் மீதான செலாவணி வீத மாறுபாடுகளின் தாக்கம் அட்டவணை 1.63 இல் தரப்பட்டுள்ளது.

## அரசின் படுகடன் பணிக்கொடுப்பனவுகள்

அரசின் படுகடன் பணிக்கொடுப்பனவுகள் ரூ. 226,710 இலட்சம் கடன் தீர்ப்பனவுக் கொடுப்பனவுகளையும் ரூ. 380,310 இலட்சம் வட்டிக் கொடுப்பனவுகளையும் உள்ளடக்கி மொத்தம் ரூ. 607,020 இலட்சமாக விளங்கி முன்னைய ஆண்டைவிட 6 சதவீத அதிகரிப்பைப் பதிவு செய்தன. மொத்த உள்நாட்டு உற்பத்தியின் விகிதமொன்றாக படுகடன் பணிக்கொடுப்பனவுகள் 1993 இன் 11.5 சதவீதத்திலிருந்து 1994 இல் 10.5 சதவீதத்திற்கு சிறிதளவால் வீழ்ச்சியடைந்தன. முதிர்ச்சியடையும் ரூபாப் பிணைகளின் தொகை குறைவாகக் காணப்பட்டமையே இதற்கான பெருமளவு காரணமாகும். வெளிநாட்டுப் படுகடன்

மீதான கடன் மீளளிப்புக்கள் ரூ. 76,060 இலட்சமாக விளங்கி 1993 இனைவிட 9 சதவீத அதிகரிப்பைப் பதிவு செய்தன.

1993 இல் திறைசேரி உண்டியல்களின் மீதான உயர்ந்த வருவாய்களின் காரணமாக 1994 இல் ரூ. 187,120 இலட்சமாக விளங்கிய குறுங்கால கடன்களின் மீதான வட்டி 1993 இல் அவதானிக்கப்பட்ட 12 சதவீத அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் 40 சதவீதத்தினால் அதிகரித்தது. ரூ. 138,080 இலட்சமாக விளங்கிய நடுத்தரகால நீண்டகால கடன்களின் மீதான வட்டிக் கொடுப்பனவுகள் 1993 இன் 27 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 1994 இல் 18சத வீதத்தினால் அதிகரித்தன. இவ்வதிகரிப்பானது 1993 இன் பிற்பகுதியில் ரூபாக் கடன்களின் மீது வழங்கப்பட்ட உயர்ந்த வட்டிவீதங்களினதும் 1994 இல் வெளிநின்ற கடன் தொகை அதிகரித்தமையினதும் காரணமாக ஏற்பட்டதாகும்.

1994 இல் வெளிநாட்டுப்படுகடன் மீதான வட்டிக்கொடுப்பனவுகள் 8 சதவீதத்தினால் ரூ. 55,110 இலட்சத்திற்கு அதிகரித்தன. 1993 இற்கான ஒப்பிடத்தக்க தொகை ரூ. 51,020 இலட்சமாக விளங்கியதோடு இது 1992 இன் வெளிநாட்டுப் படுகடன் மீதான வட்டிக் கொடுப்பனவுகளை விட 8 சதவீதம் உயர்வானதாகும். அரசின் படுகடன் பணிக்கொடுப்பனவுகள் மீதான புள்ளிவிபரத் தொகுப்பு அட்டவணை 1.64 இல் தரப்பட்டுள்ளது.

## இறைக் கொள்கை

தேசிய தேர்தலுக்கான நிகழ்ச்சிகள் நடந்து கொண்டிருந்தமையின் காரணமாக 1994 இல் அரசிறைக் கொள்கையில் தளர்வு காணப்பட்டது. மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 1.1 சதவீதத்திற்குச் சமமாக நடைமுறைக் கணக்குத் தொழிற்பாட்டில் மிகையொன்றினை உருவாக்கி மொத்த வரவு செலவுத் திட்டப் பற்றாக்குறையினை மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 6.8 சதவீதத்திற்குக் கட்டுப்படுத்தி அரசின் அரசிறைச் செயலாற்றத்தை உறுதிப்படுத்த வேண்டுமென்ற கடப்பாட்டின் மத்தியிலும் நலிவடைந்த அரசிறை முயற்சிகளும் தளர்த்தப்பட்ட செலவுக் கொள்கைகளும் நடைமுறைக் கணக்கின் பற்றாக்குறையினை மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 2.9 சதவீதத்திற்கும் மொத்த வரவு செலவுத் திட்டப்பற்றாக்குறையினை மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 10 சதவீதத்திற்கும் இட்டுச் சென்றதுடன் அதி உயர் மட்டத்திலான உள்நாட்டுக் கடன்பெறுகைகளும் தேவைப்படுத்தப்பட்டன. இறக்குமதித் தீர்வை, மொத்த விற்பனை வரிகள், வருமான வரிகள் என்பனவற்றின் குறைப்பின் ஊடாக வழங்கப்பட்ட பலதரப்பட்ட சலுகைகளின் காரணமாக அரசின் அரசிறை முயற்சிகள் நலிவடையச் செய்யப்பட்டவேளையில் பலதரப்பட்ட நிவாரண நடவடிக்கைகளின் பெருமளவு காரணமாக நடைமுறைச் செலவில் விரிவாக்கமொன்றும் காணப்பட்டது. இவ்வெளிப்பாடுகள் பொருளாதாரத்தின் மீது கணிசமான கேள்வித் தாக்கத்தினைக் கொண்டிருந்தது மட்டுமன்றி வரித்தளத்தின் தேய்வு மற்றும் ஓய்வூதியங்கள், சம்பளங்கள் வீட்டுத்துறைக்கான மாற்றல்கள், வட்டிக் கொடுப்பனவுகள் என்பனவற்றின் மீதான உயர்ந்த செலவின் ஊடாக அரசின் வரவு செலவுத் திட்டத்தில் அமைப்பு ரீதியான பிரச்சனைகளையும் மேலும் சிக்கலாக்கின. இதன் காரணமாக அரசின் அரசிறைச் செயலாற்றத்தை உறுதிப்படுத்துவதற்காக வேண்டி அரசதுறைத் தொழில்வாய்ப்பு, தொழில்நிலைப் பிரிவுகளை நியாயப்படுத்தல்,

நிருவாக விலைத் திருத்தங்கள், நலன்புரி நிகழ்ச்சித் திட்டங்களை நியாயப்படுத்தல் என்பன தொடர்பாக தற்போது நடைபெற்றுக்கொண்டிருக்கும் அமைப்புச் சீராக்கங்கள் 1994 இல் பின்னடைவினைக் கொண்டிருந்ததோடு எதிர்கால அரசிறைச் சீராக்கங்களை மேலும் கடினமாக்கின.